இலக்கு

இதழ் 78

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

மே 18, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER, USA

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakku.ilakku.10 https://twitter.com/Ilakku1

ஆறாத வலிகள்: நீதிக்கான ஏக்கம்

பி.மாணிக்கவாசகம்

இறுதிவரை உறுதியுடன் பணி செய்த தமிழீழ மருத்துவத்துறை

அருண்மொழி

சிறகுகள் ஒடிந்தாலும் சிகரம் தொடுவோம்

மிதயா கானவி

மீளெழுச்சிக்கு விதையான முள்ளிவாய்க்கால்?

ந. மாலதி

கொடிய போரிலும் கிடைத்த வளங்களைக் கொண்டு பட்டினிச் சாவைத் தவிர்த்த தமிழீழ அரசு

ஆர்த்தி

முள்ளிவாய்க்காலின் பின்னரான ஈழத்தமிழர் வாழ்வியல் பிரச்சினைகளும் எதிர்கொள்வதற்கான வழிமுறைகளும்

சூ.யோ.பற்றிமாகரன்

தொடரப்படக் கூடிய இடத்தில் விடப்பட்ட போதும் தொடரப்படாத போராட்டம்

வேல்ஸ் இல் இருந்து அருள்

கிழக்குத் தீமோர் முன்னாள் ஜனாதிபதி வழங்கும் முள்ளிவாய்க்கால் நினைவுப் பேருரை

கிழக்குத் தீமோரின் முன்னாள் பிரதமரும், ஜனாதிபதியுமாகிய *José Manuel Ramos-Horta* அவர்கள், ஈழத் தமிழர்களின் நீதிக்கான போராட்டத்துக்கான குரலாக முள்ளிவாய்க்கால் படுகொலையின் 11வது ஆண்டு தேசியதுக்கநாளில், முள்ளிவாய்க்கால் நினைவு பேருரையினை வழங்க இருப்பதாக நாடுகடந்த தமிமீழ அரசினால் (TGTE) அறிவிக்கப்பட்டுள்ளது. *José Manuel Ramos-Horta* அவர்கள் கிழக்கு தீமோரின் விடுதலைப் போராளியாகவும், சமாதானத்துக்கான நோபால் பரிசு பெற்றவராகவும், இராஜதந்திரியுமாக இருப்பதோடு, கிழக்குத் தீமோர் சுதந்திர தேசத்தின் பிரதமராகவும் (2006-07), அதிபராகவும் (2007-12) பொறுப்புக்களை வகித்தவர்.

திங்கட்கிழமை (18) (அமெரிக்க நேரம் 11 am, ஐரோப்பா 5 pm, தமிழகம், இலங்கை 9.30 pm) ஆகிய நேரங்களில் இணையவழி www.tgte.org அல்லது Facebook : TGTE மூலமும், மற்றும் பல உலகத்தமிழர் ஊடகங்களிலும், சமூகவலைத் தளங்களிலும் அவருடைய பேருரையினை காணலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழம் என்ற சொல்லைக் கண்டு பதறிய சிறீலங்கா

பிரித்தானியாவில் இருந்து வெளிவரும் த கார்டியன் பத்திரிகையின் சுற்றுலாத்துறை கையேட்டில் உள்ள கேள்வி பதில் பகுதியில் ஈழம் என்ற சொல் பிரசுரிக்கப்பட்டதற்கு எதிராக சிறீலங்கா அரசு கடும் சீற்றம் அடைந்துள்ளது.

பத்திரிகைகளில் இருந்து ஈழம் என்ற சொல்லை அகற்றுமாறு சிறீலங்காவின் பிரித்தானிய தூதரகம் பத்திரிகை நிறுவனத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

தொடர்ச்சி 16 பக்கம்

சிறீலங்காவை காப்பாற்ற இந்தியா உறுதி

தற்போதைய கொரோனா நெருக்கடிகளினால் கடும் பாதிப்புக்களைச் சந்தித்துள்ள சிறீலங்காவின் பொருளாதாரத்தை மீண்டும் விரைவாக சீர் செய்வதற்கு இந்தியா சிறீலங்காவுடன் இணைந்து பணியாற்றும் என சிறீலங்காவுக்கான இந்திய தூதரகத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக துறை அதிகாரி சுஜா மேனன் தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை (16) இடம்பெற்ற இந்தியா மற்றும் சிறீலங்கா வர்த்தக கூட்டமைப்பின்

தொடர்ச்சி 17 பக்கம்

கோவிட்-19 - சிறீலங்காவில் பாதிக்கப்பட்டோர் 960 ஆக உயர்வு

சிறீலங்காவில் பரவிவரும் கொரோனா வைரசின் தாக்கத்திற்கு இதுவரையில் 960 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சிறீலங்கா சுகாதாரத் திணைக்களம் சனிக்கிழமை (16) தெரிவித்துள்ளது. சனிக்கிழமை இரவு 11.30 வரையிலுமான 24 மணி நேரத்தில் மேலும் 25 பேருக்கு நோய் உள்ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் 23 பேர் கடற்படை சிப்பாய்கள்.

வீடுகளில் விளக்கேற்றி வீரவணக்கம் செலுத்துவீர் – பழ. நெடுமாறன்

தமிழ் மக்கள் அனைவரும் 17 மற்றும் 18 ஆம் நாட்களில் தமது வீடுகளில் விளக்கேற்றி போரில் மரணித்த மக்களுக்கும் போராளிகளுக்கும் அஞ்சலிகளை செலுத்த வேண்டும் என உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவி

தொடர்ச்சி 17 பக்கம்

றுவாண்டா இனப்படுகொலையாளி பிரான்ஸில் கைது

றுவாண்டாவில் 1994ஆம் ஆண்டு இடம் பெற்ற இனப்படுகொலைக்கு நிதி வழங்கியவரை பிரான்ஸ் காவல்துறையினர் கடந்த சனிக்கிழமை (16) கைது செய்துள்ளனர்.

பெலிசியன் கபுகா (84) என்ற இனப்படுகொலையாளி அனைத்துலகக காவல்துறையினரால் தேடப்பட்ட குற்றவாளியாவார். றுவாண்டாவில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அனைத்துலக நீதிமன்ற விசாரணைகளில் இவர் குற்றவாளி என உறுதிப்படுத்தப்பட்டிருந்தார்.

குற்று மிதவாதிகளுக்கு நிதி வழங்கி 800,000இற்கு மேற்பட்ட மக்களை படுகொலை செய்வதற்கு இவர் 1994ஆம் ஆண்டு உதவிகளை வழங்கியிருந்தார். ருற்சி சிறுபான்மை இனத்தவர்களே படுகொலை செய்யப்பட்டவர்கள். இவரை கைது செய்வதற்கு உதவு பவர்களுக்கு 5 மில்லியன் டொலர்கள் தருவதாக அமெரிக்கா அறிவித்திருந்தது.

வடக்கில் அதிகரிக்கும் இராணுவ ஆக்கிரமிப்பு

போரில் மரணித்த வர்களை நினைவு கூரும் நிகழ்வுகளை தடுப்பதில் சிறீலங்கா அரசு மிகவும் தீவிரமாக செயற்பட்டு வருவதாக வடமாகாணத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

வடக்கில் புதிய சோதனைநிலையங்களை அமைத்துள்ள சிறீலங்கா படையினர், மக்களையும், தமிழ் அரசியல் கட்சிகளையும் கண்காணி

தொடர்ச்சி 17 பக்கம்

அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என அரசு கூறவில்லை – ரம்புக்வெல

தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் சிறீலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களில் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என அரசு கூறவில்லை என சிறீலங்கா அரசின் முன்னாள் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல சனிக்கிழமை (16) தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதவது:

அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என யார் கூறியது? பேச்சுக்கள் மட்டுமே நிகழ்ந்தன, எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை. எம்மிடம் தெளிவான நிலைப்பாடு உள் ளது. புலம்பெயர் சமூகத்தின் அல்லது தமிழ் தேசியவாதிகளின் தேவைகளை நாம் நிறைவேற்

தொடர்ச்சி 17 பக்கம்

அச்சுறுத்தலையும் மீறி நினைவுகூரப்பட்ட இனப்படுகொலை நாள்

சிறீலங்கா அரசினால் ஊடகவியலாளர்களுக்கு விடுத்த அச்சுறுத்தல்களையும் மீறி தமிழினப் படுகொலை வாரத்தின் 4 ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வு யாழ். நகரில் உள்ள தமிழாராட்சி மாநாட்டு படுகொலை நினைவு தூபி முன்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் பங்குகொண்டவர்களை

தொடர்ச்சி 17 பக்கம்

கொரோனா வைரஸ் உலகில் இறந்தவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்திற்கும் அதிகம்

உலகில் உள்ள 184 நாடுகளில் தொடர்ந்து பரவிவரும் கோவிட்-19 நோயினால் இதுவரையில் 313,267 பேர் இறந்துள்ளதுடன், 4,722,306 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் 1,813,039 பேர் குணமடைந்துள்ளனர்.

அதிக மக்கள் இறந்த நாடுகளின் விபரம்:

அமெரிக்கா 90,113, பிரித்தானியா 34,466, இத்தாலி 31,763, பிரான்ஸ் 27,625, ஸ்பெயின் 27,563, பிரேசில் 15,662, பெல்ஜியம் 9,005, ஜேர்மனி 8,027, சீனா 4633, இந்தியா 2,872, ரஸ்யா 2,537.

இதனிடையே, இந்தியாவில் நோய் வேகமாக அதிகரித்து வருவதுடன், அங்கு பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சீனாவை விட அதிகமாகியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் இந்த அதிகரிப்பு சிறீலங்காவையும் பாதிக்கலாம் என்ற அச்சங்கள் எழுந்துள்ளது.

அனைத்துலக ஈழத் தமிழர் உரிமை மையம்
INTERNATIONAL CENTRE FOR EELAM TAMILS RIGHT

சிறீலங்கா அரசின் தொடர் தமிழ் இன அழிப்பின் உச்சக்கட்டமாக விளங்கிய முள்ளிவாய்க்கால் பேரழிவின் பதினோராவது ஆண்டு நினைவு நாளை உலகம் எங்கும் வாழும் தமிழ் மக்கள் வலிகளுடன் நினைவு கூரும் நாளாக மே மாதம் 18ஆம் நாள் அமைந்துள்ளது.

1948ஆம் ஆண்டு சிறீலங்கா சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து தமிழ் இனம் தொடர் கட்டமைக்கப்பட்ட பண்பாட்டு அழிப்புக்களை சந்தித்து வருகின்றது. கல்வி புறக்கணிப்பு, காணி அபகரிப்பு, மொழிப் புறக்கணிப்பு, தொழில் புறக்கணிப்பு, ஆயுத அடக்குமுறைகள், படைத்துறை அடக்குமுறைகள், அரசியல் புறக்கணிப்பு, கலாச்சார அழிப்பு என கடந்த 72 வருடங்களாக தமிழ் இனம் தொடர் பண்பாட்டு அழிப்புக்கு உட்பட்டு நிற்கின்றது.

பிராந்திய மற்றும் உலக வல்லரசுகளின் துணையுடன், சிறீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட முழு அளவிலான ஒரு இன அழிப்பு போராகவே முள்ளிவாய்க்கால் படுகொலைகள் நிகழ்ந்து முடிந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையும் தமிழ் மக்களை காப்பாற்ற முன்வரவில்லை.

ஒரு இன அழிப்பு அரசின் கைகளில் பலியாடுகள் போல தமிழ் மக்களை ஒப்படைத்து விட்டு உலகம் தனது கண்களை மூடிக் கொண்டது. ஐக்கிய நாடுகள் சபையின் தகவல்களின்படி இறுதிப் போரில் 70ஆயிரம் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இறுதிப் போரிலும், சிறீலங்காவில் கடந்த 30 வருடங்களுக்கு மேல் நடந்த ஆயுதப் போரிலும் சிறீலங்கா அரசுகள் மேற்கொண்ட இனப்படுகொலை, மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் போன்றவற்றில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியையும், தமிழ் இனம் தன்னை காத்துக் கொள்ளவும், பிரித்தானியாவின் ஆட்சிக் காலத்தில் இழக்கப்பட்ட தனது இறைமையை மீட்டு எடுப்பதன் மூலம் தனது அரசியல் உரிமைகளை வென்றெடுக்கவும் அனைத்துலக சமூகத்திடம் ஜனநாயக வழிகளில் போராடி வருகின்றது.

ஆரம்பத்தில் சிறீலங்கா அரசிடம் உரிமைகளை கேட்டு மேற்கொள்ளப்பட்ட ஜனநாயகப் போராட்டம், பின்னர் சிறீலங்கா அரசின் ஆயுத அடக்குமுறைகளுக்கு எதிரான ஆயுதப் போராட்டமாக பரிணமித்தது. அது தற்போது மீண்டும் அனைத்துலக சமூகத்திடம் நீதியையும், தமிழ் இனத்தின் இறைமையையும் வேண்டும் ஜனநாயகப் போராட்டமாக மாறியுள்ளது.

அதாவது போராட்ட வடிவங்கள் மாற்றம் பெற்ற போதும், இலக்கும், இலட்சியமும் ஒன்றுதான். அது எமது மக்களின் விடுதலை மற்றும் சுயாட்சி அரசியல் அதிகாரம்.

2009ஆம் ஆண்டிற்கு பின்னர் ஆரம்பித்த இந்தப் போரில் நாம் பல உன்னதமான முன்னகர்வுகளை மேற்கொண்ட போதும், எமக்குள் காணப்பட்ட ஒற்றுமையின்மை எமது நகர்வுகளில் ஒரு தேக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

எமது உயிர்த் தியாகங்கள் வீண் போகக்கூடாது என்றால், எமக்கு ஆதாரங்களுடன் கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தை நாம் தவறவிடுதலாகாது. சிறீலங்கா அரசு என்பது எமது எதிரி. அது எமது ஒற்றுமையை குலைத்து எம்மக்களின் விடுதலை வேட்கையை இல்லாது செய்யவே தனது வளங்கள் அனைத்தையும் பயன்படுத்தும். ஆனால் நாம் அதன் வலையில் வீழ்ந்து விடாமல் எமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை சரியான வழிகளில் நகர்த்தி மக்களை ஒருங்கிணைத்து எமது விடுதலையை வென்றெடுக்க வேண்டும். அது தான் எமது விடுதலைப் போரில் உயிர் துறந்த மக்களுக்கும், போராளிகளுக்கும் நாம் செய்யும் தூய்மையான வணக்கமாகும்.

மே மாதம் இடம்பெறும் அஞ்சலி நிகழ்வுடன் நின்று விடாது, அடுத்த வருட மே மாதத்திற்கு முன்னர் நாம் என்ன பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை திட்டமிட்டு ஒவ்வொரு தமிழ் மக்களும் ஒற்றுமையாக பணியாற்றுவோமாக இருந்தால், எமது விடுதலைக்கான காலம் வெகு தொலைவில் இல்லை.

எனவே ஒற்றுமையே எமது பலம் என்ற சிந்தனையுடன் நாம் இணைந்து பணியாற்றி எமது விடுதலையை வென்றெடுப்போம் என இந்நாளில் உறுதி கொள்வோமாக.

18.05.2020

அனைத்துலக ஈழத் தமிழர் உரிமை மையம்
www.internationalcentreforeelamtamilsright.com

இலக்கு

உலகால் தீர்க்கப்பட முடியாத தலைமுறைப் பிரச்சினையாக
முள்ளிவாய்க்கால் இனஅழிப்புப் பிரச்சினை

பதினொரு ஆண்டுகள் நிறைவெய்திய நிலையில், உலகால் தீர்க்கப்பட முடியாத தலைமுறைப் பிரச்சினையாக முள்ளிவாய்க்கால் இனஅழிப்புப் பிரச்சினை தொடர்கிறது. ஈழத்தமிழர்கள் மேல் சிறீலங்காப் படைகள் முள்ளிவாய்க்காலை மையமாக வைத்துச் செய்த இனஅழிப்புக்கான நீதியையோ அல்லது இந்த இன அழிப்பால் பாதிப்புற்றவர்களின் கிட்டிய குடும்ப உறுப்பினர்களுக்கான புனர்வாழ்வையோ, பெற இயலாத நிலையில் உலகம் கடந்த பதினொரு ஆண்டுகளாக உள்ளது.

தெளிவாகச் சொன்னால் முள்ளிவாய்க்காலில் ஈழத்தமிழர் சிறீலங்காவால் இனஅழிப்புக்கு உள்ளாக்கப்பட்டு ஒரு தலைமுறை நிறைவு பெற்று அடுத்த தலைமுறை தோன்றி விட்ட நிலையிலும், உலக நாடுகளாலோ, உலக அமைப்புக்களாலோ, பாதிப்புற்றவர்களுக்குச் சட்ட ஆட்சியின் மூலமோ ஜனநாயகத்தின் வழியிலோ நீதியை கிடைக்கச் செய்து அவர்களுக்கு புனர்வாழ்வளித்து தீர்வு காண இயலாத உலகப் பிரச்சினையாகத் தொடர்கிறது.

இந்த உண்மையை உலகுக்கு எடுத்துரைக்க வேண்டிய பொறுப்புள்ளவர்களாக உலகெங்கும் முக்கிய நாடுகளின் குடிமக்களாக உள்ள புலம்பெயர் ஈழத் தமிழர்கள் உள்ளனர். புலம்பெயர் ஈழத்தமிழர்கள் தமது பலத்தையும் வளத்தையும் ஆற்றல்களையும் ஒன்று திரட்டி ஓரணியில் நின்று இந்த முக்கியமான பிரச்சினைக்கு உலகின் மூலம் தீர்வு காண வைக்க வேண்டிய தங்கள் பொறுப்பிலும் அலட்சியமாகவே நடந்து கொள்கின்றனர் என்பதே பதினொரு ஆண்டுகால வரலாற்றுப் பதிவாக உள்ளது. எனவே புலம்பெயர் தமிழர்கள் தங்களிடை உள்ள மாறுபாடுகளை மதித்து இந்த விடயத்தில் பொது வேலைத் திட்டமொன்றில் ஒன்றுபட்டு நின்று செயலாற்ற வேண்டிய ஆண்டாக தொடரவுள்ள பன்னிரண்டாவது ஆண்டு அமையட்டும்.

மேலும், சிறீலங்கா அரசாங்கத்தின் பதினொரு ஆண்டுகால நிலைப்பாடானது, பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிலைநிறுத்திக் கொள்கிற ஒரு ஆட்சியாளர்; அந்தப் பாராளுமன்றத்தின் ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பில் தாம் நினைத்த மாதிரி இனஅழிப்புக்களையும், மனிதாயத்திற்கு எதிரான குற்றச் செயல்களையும், இன அழிப்புச் செயல்களையும் செய்து விட்டு, அது தங்களுடைய இறைமை தரு உரிமை என அந்தக் குற்றச் செயல்களை நியாயப்படுத்தி, எந்த நாடுகளுடன் நடை முறையில் அவர்களின் சந்தை நலன்களுக்கும் இராணுவத் தேவைகளுக்கும் தனது இறைமையைப் பகிர்ந்து உறவாடுகிறதோ, அந்த நாடுகளின் துணையுடன், அனைத்துலகச் சட்டங்களுக்கும் அனைத்துலக அமைப்புக்களுக்கும் ஈடுகொடுத்து வாழலாம் என்னும், உலகின் புதிய அரசியல் ஒழுங்குமுறையைத் தோற்றுவித்துள்ளது. இது உலக அமைதிக்கும் பாதுகாப்புக்கும் எத்தகைய மோசமான நிலைகளைத் தோற்றுவிக்கும் என்பதை உலகின் மனித உரிமை அமைப்புக்களையும் உலக அமைதிக்கான அமைப்புக்களையும், செயற்பாட்டாளர்களையும் சிந்திக்க வைக்க வேண்டிய பொறுப்பும் புலம்பெயர் ஈழத்தமிழர்களுக்கே உள்ளது.

இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் ஆங்கிலேய காலனித்துவக் காலம் வரை இறைமையோடும் தன்னாட்சியோடும் தனியான தேசியத்தன்மையுடனான ஆட்சிப்பரப்புக்களைக் கொண்டிருந்த ஈழத்தமிழ் மக்களின், இறைமையையும் தன்னாட்சியையும், இலங்கைத்தீவில் பிரித்தானிய காலனித்துவ அரசால் ஒற்றையாட்சித் தன்மையையும் தாங்கள் பெரும்பான்மையினர் என்ற எண் விளையாட்டு அரசியலையும் பெற்றுக் கொண்ட சிங்கள பௌத்த பேரினவாதம், இனஅழிப்பின் மூலம் தனதாக்கத் தொடங்கிய திட்டமிட்ட செயற்பாடுகளின் உச்சமாகவே முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பு வரலாறாகியது. எனவே முள்ளிவாய்க்கால் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை அல்ல அனைத்துலகப் பிரச்சினை என்பதை உலக நாடுகளுக்கு உணர்த்தி, பாதிப்புற்று எல்லைப்படுத்தப்பட்டுள்ள மக்களாக, அதீத மனிதாய தேவைகளில் ஒரு தலைமுறையைக் கடந்து வாழ்ந்து வரும் இம்மக்களுக்கு, சிறீலங்காவின் இறைமையை மீறி மனிதாய தேவைகளில் உள்ள மக்களுக்கு உதவுவதற்கான அனைத்துலகச் சட்டங்களுக்கு அமைவாக நேரடியாக மனிதாய உதவிகளை வழங்கி, அவர்களின் உயிரையும் உடைமைகளையும் நாளாந்த வாழ்வையும் காப்பாற்றுமாறு தொடர்ந்து வலியுறுத்த வேண்டியவர்களாக புலம் பெயர் ஈழத்தமிழர்கள் உள்ளனர்.

மேலும் முள்ளிவாய்க்கால் பிரச்சினை அனைத்துலக மனித உரிமைகள் சபையாலும், அனைத்துலக நீதிமன்றத்தாலும் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டிய பிரச்சினை என்பதற்கான போதிய சான்றாதாரங்கள் உள்ளன. இவற்றின் அடிப்படையில் ஈழத்தமிழர்களுக்கு உதவும் மனித உரிமைகள் மற்றும் உலக அமைதி என்பவற்றுக்காகப் பாடுபடும் அனைத்துலகச் செயற்பாட்டாளர்களுடன் இணைந்து புலம்பெயர் ஈழத்தமிழர்கள் இரண்டாவது தலைமுறைக்கு உலகின் தீர்க்கப்பட முடியாத பிரச்சினையாகப் பாரப்படுத்தப்பட்டுள்ள இப்பிரச்சினைக்கு உரிய தீர்வுகள் பெற முயற்சிக்க வேண்டியது புலம்பெயர் தமிழர்களின் இனத்துவக் கடமையாக உள்ளது.

– ஆசிரியர்

ஆறாத வலிகள்: நீதிக்கான ஏக்கம்

பி.மாணிக்கவாசகம்

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற துயரச் சம்பவங்கள் எண்ணற்றவை. அந்த சம்பவங்கள் மனிதப் படுகொலைகளாக, மனித உரிமை மீறல்களாக, மனிதத்துக்கு எதிரான மோசமான செயல்களாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. அவற்றை போர்க்குற்றச் செயல்களாகவும் திட்டமிட்ட ஓர் இன அழிப்பு நடவடிக்கையாகவும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் வகைப்படுத்தி பதிவு செய்திருக்கின்றன. கிழக்குக் கரையோரத்தின் ஒரு குறுகிய நிலப்பரப்பாகிய முள்ளிவாய்க்காலிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கின்றோம் என்ற பெயரில் கண்மண் தெரியாத வகையில் எறிகணைத் தாக்குதல்களை அரச படைகள் நடத்தின. கடலில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்டிருந்த கடற்படையினருடைய தாக்குதல் படகுகளில் இருந்து நிலப்பரப்பை நோக்கி தொடர்ச்சியாக பீரங்கிக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. வானில் இருந்து உலங்கு வானூர்திகளும் குண்டு வீச்சு விமானங்களும் தங்கள் பங்கிற்கு வான் வழி குண்டுத் தாக்குதல்களை நடத்தின. சீரான முறையில் பல்குழல் எறிகணை பீரங்கிகளும் குண்டுத் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்தன. இவற்றுக்கிடையில் சுமார் ஒரு கிலோ மீற்றருக்குக் கிட்டவான தூரத்தில் பாய்ந்து உயிர் குடிக்கத்தக்க வல்ல இயந்திரத் துப்பாக்கிகளின் குண்டுகளும் சீறிப் பாய்ந்து கொண்டிருந்தன.

அந்தப் பெருந் தாக்குதல்களில் 40 ஆயிரம் பேர் வரையில் பொதுமக்கள் கொல்லப்பட்ட தாக ஐ.நா மன்றம் பதிவு செய்திருக்கின்றது. ஆயினும் அந்த எண்ணிக்கை அதையும் விட அதிகம் என்று அந்த ஊழிப் பேரவலத்தில் சிக்கி உயிர் மீண்டு வந்துள்ளவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். மக்கள் அங்கு கொத்துக் கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்டார்கள் என கண்கண்ட சாட்சிகள் பலரும் கதை கதையாகக் கூறியிருக்கின்றார்கள். மனங்களை உறையச் செய்கின்ற அவர்களின் வாக்கு மூலங்கள் பல பல்வேறு வடிவங்களில் பதிவாகி இருக்கின்றன.

புதுமாத்தளன் பாடசாலைக்கு அரச வைத்தியசாலை நகர்ந்திருந்த நேரம் அது. அந்த வைத்தியசாலையில் இருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் இடம்பெற்ற எறிகணை தாக்குதல் ஒன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் பலியாகிப் போனார்கள். ஒரு மகன் உட்பட இரு பதுக்கும் அதிகமானவர்கள் அந்தச் சம்பவத்தில் காய மடைந்தார்கள். அந்த இடம்பெயர் வாழ்க் கை நிலத்தைத் தோண்டி அமைக்கப்பட்ட பங்கர்கள் என்றழைக்கப்படுகின்ற பதுங்கு குழிகளில் தான் நகர்ந்து கொண்டிருந்தது. அந்தக் குடும்பமும் ஏனைய குடும்பங்களைப் போன்று தரப்பாள்கூடாரங்களில் பெண்கள் அணிகின்ற சேலைகளைக் கொண்டு மறைக்கப்பட்ட பதுங்கு குழி வீட்டில் தஞ்சமடைந்திருந்தது.

அந்தத் தாயார் உணவுக்காகக் கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்தார். தந்தையாரும் ஏதோ செய்து கொண்டிருந்தார். அவர்களின் ஒரேயொரு மகளும் அவர்களுடன் இருந்தார். தேங்காய் கிடைக்குமா என்று பார்த்து வாங்கி வருவதற்காக வெளியில் போயிருந்த ஒரு மகன் திரும்பி வந்து கொண்டிருந்தார். அந்த நேரம் தான் அந்த அனர்த்தம் நேர்ந்தது. சீறி வந்த எறிகணையொன்று சரியாக இலக்கு வைத்துத் தாக்கியது போல அந்தக் கொட்டில் மீது விழுந்து வெடித்தது. அந்த எறிகணையின் நேரடி தாக்கத்தில் கொல்லப்பட்டார்கள். வெளியில் இருந்து வந்த மகன் கொட்டிலை நெருங்கிய போது எறிகணை வீழ்ந்து வெடித்தது. இதனால் படுகாயமடைந்தார். அந்தக் குடும்பத்தில் அப்போது அவர் மட்டுமே தெய்வாதீனமாகக் காயங்களுடன் உயிர் தப்பினார். அருகில் நெருக்கமாக அமைந்திருந்த கொட்டில்களில் இருந்தவர்கள் சுமார் 20 பேரளவில் அந்தச் சம்பவத்தில் காயமடைந்தார்கள். இந்தச் சம்பவம் குறித்து புது

மாத்தளன் வைத்தியசாலையில் அப்போது பணியாற்றிய முன்னாள் மருத்துவ போராளி ஒருவர் விபரித்தார். பிரமந்தனாறைச் சேர்ந்த அந்தக் குடும்பத்தில் மூன்று பிள்ளைகள். ஒரு மகள். இரண்டு ஆண்கள். ஒரு மகன் இயக்கத்தில் இணைந்திருந்தார். மற்றவர் குடும்பத்துக்குத் துணையாக இருந்தார்.

இந்த எறிகணை தாக்குதல் நடந்த போது நாங்கள் அருகில் புதுமாத்தளன் பாடசாலைக்கு மாற்றப்பட்டிருந்த வைத்தியசாலையில் இருந்

தோம். அப்போதுதான் அந்த வைத்தியசாலை அங்கு இயங்கத் தொடங்கி இருந்தது. சம்பவ தினத்தன்று அடுத்தடுத்து இராணுவத்தினர் எறிகணை

தொடர்ச்சி 16 பக்கம்

கொடிய போரிலும் கிடைத்த வளங்களைக் கொண்டு

பட்டினிச் சாவைத் தவிர்த்த தமிழீழ அரசு

ஆர்த்தி

உலகில் போர்கள் இடம்பெறும் போது நேரடியான போரில் மட்டுமன்றி பட்டினி, நோய் போன்றவற்றாலும் அதிகளவு மக்கள் உயிரிழப்பது நாமறிந்த வரலாறு.

ஆனால் பாரிய பொருண்மியத் தடைகளை ஏற்படுத்தி, உணவுப் பொருட்களை அனுப்பாது, மக்களிடம் இருந்த உணவுக் களஞ்சியங்கள் மீதும் தாக்குதல் மேற்கொண்டு மக்களின் வாழ்வாதாரங்களை முற்றாக அழித்தவாறு ஒரு இனஅழிப்பு போரையே மேற்கொண்ட சிறீலங்கா அரசு. ஆனால் அதனை எதிர்கொண்டு தமது மக்களை பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்றியிருந்தது எங்களது விடுதலை அமைப்பு.

தமிழீழ நிர்வாகக் கட்டமைப்பு தம்மிடம் இருந்த வளங்களைப் பயன்படுத்தி எவ்வாறு மக்களைப் பட்டினிச்சாவினைத் தவிர்த்தனர், விடுதலைப்புலிகள் சாவின் விளிம்பில் நின்று போராடிய போதும், மக்களுடன் இணைந்து கிடைத்த வளங்களைக் கொண்டு எவ்வாறு உணவைப் பகிர்ந்து கொண்டனர் என்பது தொடர்பிலும் தமிழீழ நிர்வாகக் கட்டமைப்பின் திட்டமிடல் பணிப்பாளராக பணியாற்றிய மூத்த போராளி ஒருவர் தெரிவித்த கருத்துக்களை இங்கு தருகின்றோம்.

2009ஆம் ஆண்டு போர் உக்கிரமாக இடம் பெற்ற போது மக்கள் தொடர்ந்து இடம்பெயர்ந்து வந்து கொண்டிருந்தனர். அப்போது நாம் இரணைப் பாலைப் பகுதியில் தங்கியிருந்தோம். இடம் பெயர்ந்த மக்கள் மாத்தளன் பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். மிகவும் களைப்பாக இருந்த மக்கள் பட்டினியுடனே தமது பயணத்தை மேற் கொண்டு வந்தனர். இவர்களில் குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் நிலை மிகவும் வேதனை தந்தது.

எனவே இந்த மக்களின் பட்டினியை போக்கி அவர்களை காப்பாற்றும் திட்டம் தொடர்பில் சிந்தித்தோம். ஆனால் அப்போது எம்மிடம் இருந்த உணவுக் கையிருப்பு, அதனை இலகுவாக தயாரித்து எல்லா மக்களுக்கும் வழங்குவதற்குரிய நடைமுறைச் சாத்தியம் குறித்தும் கஞ்சி தயாரித்து வழங்குவது குறித்தும் ஆலோசித்தோம். அந்த யோசனை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. நாம் வழங்கும் ஒரு வேளைக் கஞ்சி அவர்களின் பசியை ஓரளவேனும் போக்குவதுடன் அவர்களின் உணவுடன் சேர்வதால் பட்டினிச் சாவில் இருந்து மக்களை காப்பாற்றும் என நாம் நம்பினோம்.

அதற்கான வளங்கள் மற்றும் இதர ஏற்பாடுகள் திட்டமிடல்கள் தொடர்ந்தன. முதலில் இரணைப்பாலையில் உள்ள ஒரு கொட்டகையில் நாம் தயாரித்த கஞ்சியை வழங்கினோம். அப்போது எம்மிடம் போதிய பொருட்கள் இருந்ததால் சுவையான பால் கஞ்சியை வழங்கினோம். அதிகளவில் பசியால் வாடிய சிறுவர்களும் குழந்தைகளும் அதனை விரும்பி உண்டனர்.

இதனை அவதானித்த விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்கள் மக்களின் பசியை போக்கும் இந்தத் திட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தையும் ஈடுபடுத்தியதுடன், தம்மாலான உதவிகளையும் வழங்கினார்.

ஆனந்தபுரத்தில் பிடுங்கப்பட்ட தேங்காய்கள், தமிழீழ அரசிடம் இருந்த அரிசி, காடுகளில் சேகரிக்கப்பட்ட விறகு மற்றும் தண்ணீர் என்பவற்றை இந்த நிலையங்களுக்கு விநியோகம் செய்வதற்கு தனித்தனி குழுக்களை அமைத்தோம்.

ஒரு நிலையம் பின்னர் 3ஆக மாறியது, அதுவே பின்னர் பல இடங்களில் விரிவாக்கம் பெற்றது. போராளிகள் மட்டுமல்லாது மக்களும் எமது நிலையங்களுக்கு வந்து உதவினார்கள். அரச பணியாளர்கள், கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் என பெருமளவானவர்கள் மக்களின் பசியை போக்கி சிறீலங்கா அரசு எதிர்பார்த்த பட்டினிச்சாவை வர விடாமல் தடுத்தனர். எமது போராட்டத்தை நாம் வெல்ல வேண்டும் என்ற மனநிலை எல்லா மக்களிடமும் இருந்ததை நாம் கண்ட போது எமக்குப் பெருமையாக இருந்தது.

எதிரி எமது உணவுக் களஞ்சியங்களை அழிப்பான் என்பது எமக்கு தெரியும், எனவே நிர்வாக சேவையிடமும், புனர்வாழ்வுக் கழகத்திடமும் இருந்த வாகனங்களில் தான் நாம் உணவை சேமித்து வைத்திருந்தோம். இந்த உத்தியானது உணவு கையிருப்பை எதிரியிடம் இருந்து பாதுகாப்பதற்கும் மக்கள் இடம்பெயரும் போது அங்கு உடனடியாக நகர்த்துவதற்கும் உதவியது.

சிறீலங்கா அரசின் போர் உக்கிரமடைய எமது மக்களின் நெருக்கடிகள் மேலும் அதிகரித்தது. அவர்களுக்கான உணவுத் தேவையும் அதிகரித்தது. மூன்று நிலையங்கள் 22 நிலையங்களாக மாற்றம் பெற்றது. ஒவ்வொரு நிலையத்திலும் 3 கிடாரங்களில் கஞ்சி தயாரிக்கப்பட்டது. மக்களிடம் இருந்து அதற்குரிய கிடாரங்களை பணம் கொடுத்தே வாங்கினோம். எந்த பொருளையும் இலவசமாகப் பெற எமது நிர்வாகம் விரும்பவில்லை.

புனர்வாழ்வுக்கழகம் கஞ்சிக்கு அப்பால் தண்ணீர்ப் பந்தல் அமைத்து நீர் ஆகாரமும் வழங்கியது. அதே சமயம் கிடைத்த கோதுமை மாவைக் கொண்டு வாய்ப்பன் தயாரித்து வாகனங்களில் கொண்டு சென்று மக்களுக்கு வழங்கினோம். ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வழங்கினோம்.

இரணைப்பாலை பகுதியில் நாம் இருந்த போதே சிறீலங்கா அரசின் இறுதியான உணவுப் பாரஊர்தி வந்தது. அதற்கு பின்னர் அரசின் உணவு விநியோகம் பெரிதாக இருக்கவில்லை. கடற்பகுதியில் இருந்து சில பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டது. 70 ஆயிரம் மக்களே உள்ளனர் என மக்களின் எண்ணிக்கையை குறைவாக கூறிய அரசு, அவர்களுக்கு போதுமான உணவு உள்ளது எனத் தெரிவித்து உணவு விநியோகத்தை நிறுத்திக் கொண்டது.

ஆனாலும் தமிழீழ நிர்வாக சபையின் சிறந்த திட்டமிடலினால் எம்மிடம் மே 15ஆம் நாள் வரை விநியோகம் செய் வதற்கான பச்சை அரிசி போதிய அளவில் இருந் தது. ஆனால் உப்பு, தேங்காய் போன்றவற்றை பெற முடியவில்லை. எனவே இறுதி நாட்களில் உப்பு மற்றும் தேங்காய் பால் இல்லாத சுவையற்ற கஞ்சியையே நாம் வழங்கினோம்.

எல்லா நிலையங்களையும் சென்று பார்வையிட்டு தேவைப்படும் விநியோகங்களையும் சீர்படுத்தினோம். காலை வேளையில் எறிகணைத் தாக்குதல் குறைவாக இருந்ததால் எல்லா நிலையங்களுக்கும் நீர், அரிசி மற்றும் விறகு போன்ற தேவையான பொருட்களை அதிகாலையில் விநியோகம் செய்து வந்தோம்.

காலை 10 மணிக்கு முன்னர் மக்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும், வைத்தியசாலை பணியாளர்கள் மற்றும் வைத்தியர்களுக்கும் நாம் கஞ்சியை வழங்கி விடுவதுண்டு. ஒரு கட்டத்தில் களஞ்சியங்களில் இருந்த பொருட்களை எம்மால் எடுக்க முடியாது போனபோது, நாம் வாகனங்களில் சேமித்த உணவுப் பொருட்களை பயன்படுத் தினோம்.

தமது வயிற்றுப் பசிக்காக கஞ்சியை வாங்குவற்கு வரிசையில் நின்றவர்கள் மீதும் வேவு விமானம் மூலம் தகவல்களைத் திரட்டிய சிறீலங்கா அரசு, எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டது. சிறுவர்கள் உட்பட பலர் பலியாகினர், பலர் காயமடைந்தனர். இது பல நிலையங்களில் இடம் பெற்றது.

எனது நிலையத்தில் உணவுக்காக காத்திருந்த வயோதிபர் ஒருவர் எறிகணைத் தாக்குதலால் தனது காலை இழந்த சோகம் தற்போதும் எனது மனதில் உள்ளது. இருந்த போதும் எமது மக்களை நாம் பட்டினிச்சாவில் இருந்து காப்பாற்றிய மன நிறைவு எங்களிடம் இப்போதும் உண்டு. மிலேச்சத்தனமான, மனித நேயமற்ற தாக்கு தல்களுக்கும் இறுக்கமான பொருளாதாரத் தடைகளுக்கும் மத்தியில் ஒரு பட்டினிச்சாவு கூட இடம் பெறாமல் எமது விடுதலை அமைப்பு மக்களைக் காத்தது.

இந்த விடயத்தில் நாம் சிறீலங்கா அரசுக்கு தோல்வியையே கொடுத்திருந்தோம். இதில் மக்கள், போராளிகள், அரச பணியாளர்கள், நிர்வாகக் கட்டமைப்புக்கள், கூட்டுறவு சங்கங்கள் என எல்லோரினதும் பங்களிப்பு அளப்பரியது, யாரும் அங்கு சுயநலம் பார்க்கவில்லை. இரவு பகலாக பணியாற்றினார்கள். நாம் ஒற்றுமையாக நின்று எமது மக்களை காப்பாற்றினோம்.

எத்தனையோ விடுதலைப் போராட்டங்களில் மக்களின் உணவை கொள்ளையடித்த சம்பவங்கள் நிகழ்ந்தன. பெருமளவானவர்கள் பட்டினியால் மடிந்த சரித்திரங்களும் உண்டு. ஆனால் எமது விடுதலைப் போரில் தான் போராளிகள் மக்களுடன் இணைந்து தமக்குக் கிடைத்த உணவை பகிர்ந்து உண்டனர். மக்களை காப்பாற்றி தமது உயிரைத் துறந்தனர்.

• • •

அவர்கள் அங்கு அழுதபடி தான் உள்ளனர்

பால் மணம் மறவா
பச்சிளம் குழந்தையின் அழுகுரல் - அதன்
மார்பு சிதைந்த தாயின் மடியில்
இன்னும் கேட்ட படி தான் உள்ளது

முள்ளிவாய்க்கால் எனும் துயரமதை
உலகம் மறக்க தொடங்கி விட்டால்
நீதி கிடைக்கா சோகமதைச் சொல்லும் அவர்களின்
அழுகுரல்கள் ஓய்ந்து தான் போகுமோ?

மண்ணிழந்து
உற்ற மக்கள் இழந்து
மற்றவை எல்லாம் இழந்து
உயிரினும் மேலான மானமும் இழந்து
கயவர் களவாடிய இலட்சம் உயிர்கள்
இன்றும் நீதி இன்றி
அமைதிதான் கொள்ளுமோ?

தசாப்தம் கடந்து தாயகத்தை — தார்
சாலைகள் மூடி விட்டால்
இனி வரும் காலமும் இந்த உலகமும்
போலிப் பாசாங்குக்குள் மளுங்கலாமோ?

பசியுடன் இன்றும் எம் மண்ணில்
குழந்தைகள் அழுது கொண்டு இருக்க;
பால் கொடுக்கவும் இயலா வறுமையுடன்
அன்னையும் கண்ணீர் வடிக்க;

இன்னும் இறுதி யுத்தம் நடந்து கொண்டு தான்
இருக்கிறது அங்கு

நீதி ஒன்று கிடைத்து,
அத்தனை ஆயிரம் உயிருக்கும்
நியாயம் ஒன்று நிலைபெறும் வரை;

முள்ளிவாய்க்கால் ஆன்மாக்கள்
அமைதி கொண்டு உறங்காமல்
அழுது கொண்டே தான் இருக்கும்...

தேனுஜா அமலதாஸ்

இழந்தவற்றை எப்படி மறப்பது ....

திருமதி ஜயந்தன் சுசி

மறக்க முடியுமா? ??
இறந்த தாயில் முலையின்றிப் பால் குடித்த பாலகன்....
தலையின்றி முண்டமாக மாய்ந்த கணவன் ....
பாக்கிடித்த பாட்டியின் தலை பதுங்குகுழி வாசல்மேல்....
கஞ்சி வாங்க போன தாத்தா உடல் மிஞ்சியது கூட இல்லை ....
வலி சுமந்தவர்கள் நாங்கள் தானே எப்படி மறப்பது .....
அடிமைதானே இனி என் இனம்....
வட்டுவாகல் நோக்கி எஞ்சிய உறவுகளுடன் நகர்ந்த போது கூக்குரல்கள். காரணம் கேட்ட பொழுது தமிழினம் அடிமையாகின்றது என்று ஓலச்சத்தங்கள். பெருமிதம் கொள்கிறது பேரினவாதம் வென்று விட்டோம் என்று ....
வென்றது பேரினவாதம் அல்ல உலக நாடுகளே!!!!
இது இரத்த வெள்ளத்தின் பயணம்... காத்திருக்க வேண்டியது நாங்கள் தானே ...
இளந்தது பொருளல்ல தேச கனவுகளைச் சுமந்து என்னுடைய கணவரை....
பதினொரு ஆண்டுகள் அல்ல பல நூறு ஆண்டுகள் என்றாலும்! !!
இழந்தவற்றை எப்படி மறப்பது ....
நம்புகின்றோம் நாங்கள் தலை நிமிர்ந்து வாழ எங்கள் தேசத்தில் நீங்கள் வருவீர்களென்று தேசியத் தலைவனுடன்....

விடுதலை முற்றம்

இரண்டு சாதிகளின் பெயராலேயே
இரண்டுபட்டுக் கிடந்தது அந்த ஊர்...
முரண்டு பிடித்த சாதிவெறிக்கு
இருக்க இடமல்ல, படுத்துறங்கத்
தலையணையும், பாயும் கொடுத்துப்
படாத பாடு படுத்தியது...

ஆழ்கடல் அலைகள் ஒரு புறம்
அழகிய பனை வடலிகள் மறுபுறம்
இடையிலே பளிங்குபோல்
மணற்கடற்கரை வெளியும்
பகலிலே கிளிகளும், இரவிலே
பால் நிலவும் கொஞ்சி
விளையாடும் வயல்வெளிகளாலும்
வண்ணமயமானது அவ்வூர்...

அலைகளில் ஏறிடும் வலைஞனின்
வாழ்விலும்,
நிலங்கீறி உழுகின்ற உழவனின்
வியர்வையிலும் செழித்துச் சிறந்து
சிங்காரம் பெற்றது அவ்வூர்....

வண்ணமயமான மணல் வெளியூர்ந்து
மனித எண்ணவலைகளை நகங்களால்
கீறிடும் நண்டுகள் போட்ட எல்லைகளால்
தான் அவ்வூர் இரண்டுபட்டுக் கிடந்ததுவோ!

கண்சிமிட்டும் காரிகையரின் காதல்
வயப்பட்டு வண்டுகள்போல் சுழலும்
காளையர்க்கும் இந்த 'நண்டுகள்'
போட்ட சாதி எல்லை என்றும்
சவாலாகத்தான் நின்றது...

அந்த உப்பு மணல் கடல்வெளியில்
தாகம் தீர்க்கும் ஒரு நல்லதண்ணிக்
கிணற்றிலும்கூட பாகப்பிரிவினை
சொல்லிச் சாதியம் தன்
தாகம் தீர்த்துக்கொண்டது...

மீசை முறுக்கியபடி பெருசுகளும்,
ஆசை அடக்கியபடி இளசுகளும்
ஆளாளுக்குத் தங்கள் ஆணவம்
காட்டியபடி சாதிய மேற்சட்டையைச்
சௌகரியமாய் அணிந்துகொண்டு வலம்
வந்தனர்...

ஆனால்,

விடுதலை பாடிய தீப்பறவைகள் வளர்த்த
தர்மவேள்வியில் தேசமெங்கிலும்
சாதியப்பேயதன் அட்டூழியங்கள்
சாம்பராகிக் கொண்டிருந்த
சரித்திர நாட்கள் அவை,
இதில், இந்த ஊர் மட்டும் என்ன
விதிவிலக்கா? - நாளை

போர்மேகங்கள் மூண்டு பொருதும்
களமாட ஒரு தேசமே திரண்டு நிற்கும்
குருசேத்திரநிலம் இதுதானென்று யாரும்
கனவிலும் அன்று நினைத்திருக்கவில்லை,
இறுதி என்ற வார்த்தைக்கு உறுதி
சேர்க்கும் நிலமாய் குருதி பாய்ச்சி எம்
விடுதலையைப் பத்திரப்படுத்திப்
பதியம் வைக்கப்போகிறோமென
எவருமே எண்ணியிருக்கவில்லை...

போர்பற்றி எரித்தது ஊரை, பொருதும்
களமாடி ஊர்பற்றி நின்றபோது
தேசம் முழுவதற்கும் தஞ்சமாய்
சீர்பெற்று நின்றது அவ்வூர்...

ஒரு இனத்தின் ஒட்டு மொத்தக்
கண்ணீரிலும், கட்டுக்கட்டாய்
உடல் சரிந்து ,சொரிந்து நின்ற
செந்நீரிலும் நனைந்து குளித்தபடி
பேதமை தகர்ந்து நிமிர்ந்து
நிற்கின்ற அந்தச் சிவந்தமண்...

அதுவே எங்கள் விடுதலை ஆன்மாவை
உயிர்ப்பிக்க, ஊரெல்லாம் திரண்டபடி
ஒன்றாய்த் தேசமாய்க்கூடி நின்று
சத்தியம் செய்கின்ற சரித்திர முற்றமாம்...
முள்ளிவாய்க்கால் எனும் விடுதலைமுற்றம்

-காந்தன்-

சிறகுகள் ஒடிந்தாலும் சிகரம் தொடுவோம்

மிதயா காண்டீபன்

வள்ளிவாய்க்கால் பேரவலத்தில் இருந்து உயிர்தப்பிப் பிழைத்து ஆனந்தகுமராசாமி இடைத்தங்கல் முகாமிற்கு வந்து விட்டோம் என்ற விதுர்சிகாவின் பெற்றோர்களின் நம்பிக்கையை தவிடுபொடியாக்கியது அந்த வெடிச்சத்தம்!

இராணுவத்தினரின் துப்பாக்கியில் இருந்து பாய்ந்து வந்த குண்டு விதுர்ஷிகாவின் உடலை துளைத்துக் கொண்டு போனதால்... முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டு இடுப்பிற்கு கீழ் இயக்கம் இழந்தது.

"மக்களை கட்டுப்படுத்துவதற்காக சுட்டோம்" என்றனர் படையினர்.

பல நாட்கள்... மாதங்களாகியும் மருத்துவ மனையை விட்டு வரமுடியவில்லை...!! இதனால் சுற்றித்திரியும் பள்ளிப் பருவமும், அவளது தரம் ஒன்றிற்காய் பாடசாலை செல்லவிருந்த முதல் நாள் கனவும் சின்னாபின்னமாகியது!

உடல் வலுவற்று கால்கள் பாரமாகியது!

குதூகலிக்க வேண்டிய குழந்தைப் பருவம் இப்படியாகி விடுமென்று நினைத்துக் கூட பார்க்க வில்லை...கால்களின் உணர்ச்சி இல்லை என்பதை நம்பமுடியாத நிமிடங்கள் தந்த வலிகள் சொல்லி முடியாது.

எப்படியும் ஒரு தடவை நிலத்தில் இறங்கி நிற்க வேண்டும் என்றெண்ணி அடிக்கடி தோற்றுப் போன நாட்களை இன்று ஒரு புன்னகையுடன் கடந்து செல்ல இவளாலும் முடியும் என்பதை இவளின் அசைக்க முடியாத தன்னம்பிக்கை காட்டுகின்றது.

எல்லோரும் ஊருக்கு திரும்பிய போது இவர்களும் முள்ளியவளை முதலாம் வட்டாரத்திற்குள் புகுந்தனர். சொந்தநிலம் சுடுகாடாய் கிடந்தது!. பாட்டன் வைத்த பலா மரமும் பாதி உயிராய் கிடக்க, தென்னோலையும் தேங்காயும் விற்றே வாழ்ந்திடலாம் என எண்ணி வைத்த தென்னைகள் எல்லாம் தலையற்று கிடந்தன.

எறும்பு, அரிசிக் குறுணல்களை சேர்ப்பது போல் கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து வைத்த அத்தனை உடமைகளையும் போர் பறித்து சென்று விட்டது மட்டுமன்றி முள்ளந் தண்டு வடம் பாதிக்கப்பட்ட தன் குழந்தையின் வலிகள் மறு பக்கம்...

குடும்ப வருமானங்களை இழந்தவராய் இனிவரும் நாட்களில் வாழ்க்கைச் செலவை எப்படிச் சமாளிப்பது என்ற ஏக்கத்துடன் புகுந்த தந்தைக்கு, வீடே இல்லாத நிலையில், பாதிக்கப் பட்ட நிலையில் எப்படி மகவை பராமரிக்கப் போகிறீர்கள் என வினவியவர்களுக்கு தனது நம்பிக்கையை மட்டுமே அவரால் பதிலாகத் தர முடிந்தது.

ஆனால் அப்போது அவர்கள் அனுபவித்த துயரங்கள் அனைத்தையும் மறந்து போக வைத்திருக்கிறது மகள் விதுர்சிகாவின் பரீட்சை முடிவுகள்.!

கொழும்பு, அநுராதபுரம் என்று மாறிமாறி மருத்துவமனைகளிற்குச் சுமந்து சென்றனர், குழந்தையை எப்படியாவது சுகப்படுத்திவிட வேண்டும் என்று! ஆனாலும், அது நிரந்தரமான பாதிப்பு என்பதை தெரிந்த பெற்றோர் பட்ட வலி சொல்ல முடியாத சோகம்! ஆனாலும் சோர்ந்து போக வில்லை தன்னம்பிக்கையை கொடுப்பதற்கு தாய் தந்தை பின் நிற்கவில்லை.

இரண்டாம் வகுப்பின் இரண்டாம் தவணையில் முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் பாடசாலை கல்வியைத் தொடங்கினாள்.

இடப்பெயர்வுகளை சந்தித்த பாடசாலை அவ்வளவு வசதிகளுடன் இருக்கா விட்டாலும், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் அந்தக் குழந்தையின் கல்விக்கு ஊக்கமளித்தனர் என்பதை நன்றியுடன் கூறிக்கொள்கின்றாள்.

உடற்குறையை வென்று தன்னை மெருகேற்றிக் கொள்வது தான் இவளது ஒற்றை இலக்காகியது. வறுமை, உடல் நலக்குறைவு அவ்வப் போது அவளது மனதை கீறிக்கொண்டிருந்தாலும், அந்தக் கீறல்களிற்கு கல்வியால் மருந்திடலாம் என்று உறுதியாக எண்ணிக் கொள் கின்றாள்.

பெற்ற மகளுக்காக தன்னையே உருக்கி உடல் இயாலாமையை புறந்தள்ளி தன் நேரங்களை செலவு செய்து வருகின்ற தாய் உதயகுமாரிக்கும்.. கூலி வேலை செல்லும் தந்தையின் வலிகளை துடைத்தெறிய தன் இலட்சியங்களை விரிவுபடுத்தினாள் விதுர்சிகா!

சாதுவான பெண்ணாக இருந்தாலும் தன்னம்பிக்கையில் சிகரம் தொடும் குரல்!

பாடசாலையில் மாணவர்கள் விளையாடும் போதெல்லாம் தன் நிலையை எண்ணி வருந்துவதை தவிர்த்து, மாற்றுவழி தேடத் தொடங்கினாள்; புத்தங்களை வாசிக்கப் பழக்கப்படுத்தினாள். சாதனைப் பெண்களின் சரித்திரங்களை அதிகம் விரும்பிப் படிப்பது அவளது பொழுது போக்காகியது.

கிடைக்கவில்லை என்பதை எண்ணி வருந்துவதை விடுத்து கிடைக்கும் சந்தர்ப்பங்களில் தனக்கு சாதகமானவற்றை தேர்வு செய்வது தான் அவளது வெற்றிகளிற்கு படிக்கல்லாகியது.!

ஒளியை நோக்கி முகத்தை திருப்பினாள்... நிழல் பின்னுக்குத்தான் செல்ல வேண்டும் என்பது இவள் வாழ்விலும் உண்மையாகியது.

விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களை விரும்பிப் படிப்பதாகக் கூறும் விதுர்ஷகா, 2019ஆம் ஆண்டு நடைபெற்ற கல்வி பொது சாதாரண தரப் பரீட்சையில் 6A B2 C பெறுபேற்றை பெற்றிருந்தார். பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்ற முடியா விட்டாலும் சக்கர நாற்காலி ஓட்டப் போட்டிகளில் பங்கு பற்றி வலயத்தில் வெற்றி பெற்று மாகாணம் வரை சென்று வென்றிருக்கின்றாள்.!

பாடசாலை சமூகம் தன் முயற்சிகளிற்கு பக்கபலமாக இருந்ததாகவும், தங்கள் சிரமங்களைப் பாராமல் வேறுபாடற்று சக்கர நாற்காலியில் இருக்கும் தன்னையும் கவனித்துக் கொண்டார்கள் என்று கண்கள் பனிக்க நன்றிகளை கூறிக் கொள்கிறாள்.

பாடசாலையை விட்டு வெளியிடங்களில் நடைபெறும் போட்டி நிகழ்வுகளில் தான் கலந்து கொள்வதில்லை என்றும், அதற்கான போக்குவரத்து வசதி மற்றும் அவசிய தேவைகளை சாமாளிக்க முடியாது என்ற வருத்தம் அவள் உதட்டோரம் ஒட்டியிருந்தாலும் அந்த வலிகளிற்குள் முடங்கி விடவில்லை.

முன்னர்தனது அண்ணாசக்கரநாற்காலியில் வைத்து தன்னை பாடசாலை தள்ளிப் போனதாகவும், இப்போ அவர் பல்கலைக்கழகம் சென்ற பின் அம்மாவுடன் போவதாகவும் நினைவு படுத் திக் கொண்டாள்!

முள்ளியவளையின் மணல் வீதிகளில், சேறு சதிகளில் புதைந்த சக்கரங்களை எடுக்க முடியாது! கடந்த நாட்களையும் மழை நீருடன் சேர்த்து கலந்து போன தாய் உதயகுமாரியின் கண்ணீரையும் இன்று துடைத்து விட்டிருக்கின்றாள் இந்த மகள்!

தொடர்ந்து சக்கரநாற்காலியில் இருப்பது என்பது சாதாரண விடயமல்ல காலை ஐந்து மணிக்கு எழும்பிப் படிப்பதற்கு உட்கார்ந்தால் இரவு பதினொரு மணிவரை கடின உழைப்பின் பின் தான் இன்று இந்த பெறுபேற்றைப் பெற்று இந்த சமூகத்திற்கு ஒரு முன்னோடியாக திகழ்கின்றாள். எத்தனை துன்பங்கள் வந்தாலும் எதிரில் தெரிவது இலக்கு மட்டுமாகவே இருந்தால் எவராலும் சாதிக்க முடியும் என்பதில் ஐயம் இல்லை!

2019ஆம் ஆண்டு கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் படி வடமாகாணம் ஒன்பதாவது இடத்தில் இருக்கின்றது என்ற புள்ளி விபரம் கவலையைத் தருகின்றது.

மாணவர்கள் யாவரும் குறைந்தவர்கள் அல்ல சரியான அர்ப்பணிப்புடன் ஆசிரியர்களும்,

தொடர்ச்சி 16 பக்கம்

இன விடுதலை போர்க்களத்தில் காயமுறும், நோய்வாய்ப்படும் போராளிகளை காப்பதில் எழுந்த சிக்கல்கள், முதல் மாவீரன் லெப். சங்கர் விழுப்புண்ணுற்று வீரச்சாவைத்தழுவும் போது விடுதலைப் புலிகளால் உணரப்பட்டது. போராளிகளைக் காத்த இலங்கை அரச வைத்தியர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்படுவதும், துன்புறுத்தப்படுவதும் வழக்கமாகியது. இதனால் போராளிகளுக்கு மருத்துவம் கற்பித்து, மருத்துவப் போராளிகளாக்குவது ஆரம்ப நாட்களிலேயே தொடங்கப்பட்டு விட்டது.

போராட்டம் வளரும் போது எழும் தேவைகளுக்கேற்ப மேலதிக கற்கைகள், பயிற்சிகள் படிப்படியாக சேர்க்கப்பட்ட தோடு மருத்துவப் பட்டப்படிப்பை மேற் கொள்ளும் பல்கலைக் கழக மாணவர்களும் போராளிகளாக இணைந்து கொண்டு போரா டிக் கொண்டே கற்கையை முடித்தனர். பத்ம லோஜினி அன்ரி, தேவா அன்ரி போன்ற வர்கள் வைத்தியர்களாகவே போரளிகளாகி

இறுதிவரை உறுதியுடன் பணி செய்த தமிழீழ மருத்துவத்துறை

அருண்மொழி

போராளி மருத்துவர்களும் அரச மருத்துவர்களும் வேறுபிரிக்க முடியாதபடி தமிழின விடுதலைப் பரப்பில் இறுக்கமாக இணைந்து பணியாற்றினர். பொது வெளிகளில் பகிரப்படாத பக்கங்களாக இவை அமைந்து கிடக்கிறது.

மலேரியா தடுப்பு நடவடிக்கைகள், கொலரா நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், டெங்கு தடுப்பு நடவடிக்கைகள், சிக்குன்குனியா நோய் தடுப்பு நடவடிக்கைகள், சுனாமி அனர்த்தம் என பல நடவடிக்கைகள் தமிழீழ அரச கட்டுமானங்களின் பங்களிப்போடு பல பிரிவுகள் உள்ளடங்கலான கூட்டு நடவடிக்கையாக இருந்தது.

அரசியல் துறை, காவல் துறை, சுகாதாரத் துறை என்பன சேர்ந்தே வேலைகளை முன்னெடுத்தன. இலங்கை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளை விட பொருளாதாரத் தடைகளின் பிடிக்குள் சிக்கிய புலிகளின் பகுதிகள் தொற்று நோய்களை தடுத்தாழ்வதில் மிகவும் திறன்வாய்ந்து விளங்கின.

இதனை சிறீலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் தடுப்பு முகாமில் குடற்புழு தொற்று தடுப்பு பற்றி பேசப்போன தடுப்புக் காவலில் இருந்த மருத்துவர்களிடம் பேசிய போது, **"நீங்கள் எதிர்பார்க்கும் உடனடி யான சுகாதார தடுப்பு செயல் முறைகள் இலங்கையின் நிர்வாகத்தில் கிடையாது. அது புலிகளின் வன்னிப் பகுதிக்குள் மட்டுமே எதிர்பார்க்க முடியும்"** என்று குறிப்பிட்டதோடு மருத்துவர்கள் கேட்டுக் கொண்ட சுகாதார நடை முறை களை உடனடியாக அமுல்படுத்தினார்.

மருத்துவமனைகளின் சிகிச்சைப் பிரிவு வேலைகளுக்கு வெளியே தமிழீழ சுகாதார சேவைகளின் வருமுன் காத்தல் களச் செயற்பாடுகளில், மருத்துவமனை களின் சிகிச்சைப் பிரிவு வேலைகளுக்கு வெளியே தமிழீழ சுகாதார சேவைகளின் வருமுன் காத்தல் களச் செயற்பாடுகளில் சுகாதார கல்வியூட்டல் பிரிவு, தாய் சேய்

தொடர்ச்சி 09பக்கம்

னர். இப்படி புலிகளின் மருத்துவப் பிரிவு தோற்றம் கண்டது.

போராட்டம் பெரும் வளர்சியடையத் தொடங்கிய போது, மிகவும் பலம் கொண்டதாக கட்டியெழுப்பப்பட்ட விடுதலைப் புலிகளின் மருத்துவத் துறையில் போராளிகளில் இருந்து மருத்துவப் பட்டதாரிகளை உருவாக்குவதற்காக தமிழீழ மருத்துவக் கல்லூரி உருவாக்கப்பட்டது. உலகத்தின் அப்போதைய ஒழுங்கில் தமிழின விடுதலையின் இறுதி அத்தியாயம் எப்படி அமையும் என்பதை கணக்கிட்டிருந்த தேசியத் தலைவர் அவர் கள், 1992 மார்கழி நாளொன்றில் மருத்துவக் கல்லூரி ஆரம்ப வைபவத்தில் போராளி மாணவ ஆளணி யிடம் பின்வருமாறு பேசினார்.

"நாம் சுமார் 450 வருடங்களாக அடிமைத் தனத்தில் தப்பிப் பிழைத்து வாழ்ந்து வரும் இனம். எமது மூளை வளம் எமது இனத்துக்கு பயன் படாத படி கல்வியை ஊட்டிய சமூகத்தை கைவிட்டு வெளியேறி காலம் காலமாக இடம் பெயர்ந்து வாழ்கின்ற நிலையே இன்று உள்ளது.

ஏனைய தேசங்களில் எல்லாம் தமது நாட்டின்மீது போர் என்று வரும்போது அந்த நாட்டின் நிபுணர்கள் கூட்டம் தனது நாட்டுக்கு படையெடுக்கும். நமது மக்களின் நிபுணர்கள் கூட்டம் தனது மக்கள்மீது போர் ஏற்பட்டு விட்டால் தனது மக்களை விட்டு விட்டு தப்பி வெளியேறி விடுவார்கள். இது நாம் நீண்ட காலமாக அடிமைப்பட்டுப் போனதன் விளைவு.

எமது தேசத்தின் மீது யுத்த நெருக்கடி சூழும்போது எமது மக்களையும் போராளிகளையும் காப்பதற்கு போராளி களிலிருந்தே ஒரு மருத்துவர் குழாமை உருவாக்க வேண்டும் என்ற தேவை உள்ளது. இது மிகவும் தாமதமாகவே தொடங்குகிறது. இருந்தாலும் இப்போ தாவது தொடங்கப்படுகிறதே என்ற நிறைவு ஏற்படுகிறது".

இந்த மருத்துவக் கல்லூரியின் மாண வப் போராளிகளை மருத்துவத்துறையின் பட்டதாரி மருத்துவர்களும், வெளியிலி ருந்து முன்வந்த பற்றுக் கொண்ட மருத்துவர்களும், விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் மனப்பூர் வமான விருப்போடு உருவாக்கலாகினர்.

குறைந்தது ஐந்து வருடங்களுக்குக் குறையாத மருத்துவப் பட்டதாரிக் கற்கையை உலக வரலாற்றில் நடாத்திய விடுதலை இயக்கமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே இருக்கும்.

புலிகள் இயக்கம் ஒரு ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை வடிவம் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாக அமையும். போர்களிலும் இடம்பெயர்வுகளிலும் தமது மருத்துவ சேவைகளை ஏனைய மருத்துவர்களோடு இணைந்தவாறும் தேவைக் கேற்ப மருத்துவப் போராளி அணிகளைக் கற்பித்து விரிவடைவித்தவாறும் தமிழீழ மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மருத்துவர்களாக உருவெடுத்தனர்.

போதனா வைத்தியசாலையிலும் பல்கலைக்கழகத்திலும் அவ்வப்போது தேவைக்கேற்ற பயிற்சிகளைப் பெற்ற இந்த மருத்துவ அணி இறுதியில் போதனா வைத்தியசாலை நிபுணர் குழுவின் தேர்வுகளின் ஊடாக தனது பட்டப் படிப்பை நிறைவு செய்தது.

மூடப்படும் நிலையில் இருந்த மக்களுக்கான அரச மருத்துவ கட்டமைப்பின் வெளிவாரி மருத்துவ மையம் முதல் மாவட்ட வைத்தியசாலை வரை ஏற்பட்டிருந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு புலிகளின் மருத்துவ ஆளணிகளே பெரும் பங்காற்றின.

இறுதிவரை உறுதியுடன் ... தொடர்ச்சி...

நலன் பிரிவு, பற் சுகாதாரப் பிரிவு, சுதேச மருத்துவப் பிரிவு, நடமாடும் மருத்துவ சேவை, தியாகி திலீபன் மருத்துவ சேவை, லெப். கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவ முகாம், தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு, பூச்சியியல் ஆய்வுப் பிரிவு, விசேட நடவடிக்கைப் பிரிவு என்பன நிறுவனமயப்பட்டு இயங்கி வந்தன. இதனால் இலங்கையின் அரச மருத்துவத் துறையின் செயலிடைவெளிகள் நிரப் பப்பட்டு நிவர்த்தி செய்யப்பட்டன.

இவற்றைப் பற்றியதான விரிவான பார்வை யை இக்கட்டுரையின் நோக்கத்தினுள் அடக்கிவிட முடியாது. செவிப்புலன் பாதிப்புற்றோர், விழிப் புலன் பாதிப்புற்றோர், போசாக்கு நோய்களுக்குட் பட்ட குழந்தைகள் பராமரிப்பு, முதியோர் பராம ரிப்பு இல்லம், சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் என பல கட்மைப்புக்கள் இயங்கின.

தூரப் பிரதேசங்களில் மருத்துவ சேவைகள் கிடைக்காத நிலைமைகளை மாற்றுவதற்காக தியாகி திலீபன் மருத்துவமனை, நோயாளர் காவு வண்டிகள் என்பன மக்களுக்காக ஏற்படுத்தப்பட் டன.

பெரும் மருத்துவ ஆளணி வளங்கள் புலி களின் இராணுவ மருத்துவ கட்டமைப்பிற்குள் பணியாற்றின. இதன் வடிவமைப்பே போரினால் காயமடையும் போராளிகளையும் மக்களையும் காக்கும் பணியில் பெரும் பங்காற்றின.

போராளிக் களமருத்துவ அணிகள், படைய ணிகளில் முன்னணி போர்முனை உயிர்காத்தல் முதலுதவிப் பணிகளை செய்தனர். அங்கிருந்து காயமடைந்தோர், உப, பிரதான களமருத்துவ நிலைகளினூடாக தளமருத்துவ நிலைகளுக்குமாற் றப்படுவார்கள்.

இராணுவ தள மருத்துவமனைகளிலேயே உயிர் காத்தல் சத்திர சிகிச்சைகள் மற்றும் உயிர் காத்தல் பராமரிப்புக்கள் இடம் பெறும். இங்கிருந்து படையணிப் பிரிவு மருத்துவமனைகளில் பின் னான பராமரிப்புக்கள் நடைபெறும். இந்த கட்ட மைக்கப்பட்ட செயற்பாடுகளில் ஏற்படக்கூடிய சிக்கல்களளை சமராய்வு நடவடிக்கைகளின் அறிக் கைகளின் ஊடாக தலைவரும் தளபதிகளும் கவ னித்து வந்தனர்.

பன்னாடுகளின் துணையோடு இறுதிப் போர் வியூகங்களை எதிரி மேற்கொண்ட போது வன்னிப் பெருநிலப் பரப்பெங்கும் போர் முனை கள் திறக்கப்பட்டன. இப்பகுதிகளில் இருந்து வரும் போர்க்காயங்களைப் பராமரிக்க இராணுவ தளமருத்துவ முனைகள் பிரித்துப் பொறுப்பளி க்கப்பட்டன.

மக்கள் இலக்குகள் மீது எதிரி தாக்குவான் என்பதையும் ராணுவ மற்றும் இடம்பெயர் மருத்துவமனைகளையும் எதிரி இலக்கு வைப்பான் என்பதையும் மருத்துவ ஆளணித் தட்டுப்பாடுகள் ஏற்படும் என்பதையும் மருத்துவப் பிரிவின் உயர்பீ டமும் தலைமையும் அறிந்து தயாராகவிரு ந்தது.

சமாதான காலத்தின் பின்பகுதியில் தலைவர் அவர்கள் திட்டமிட்டபடி **'விஞ்ஞான அறிவியல் கல்லூரி'** உருவாக்கப்பட்டு அங்கு டிப்ளோமா மருத்துவக் கற்கை, தாதியக் கற்கை, மருந்தாளர்கள் கற்கை, போசாக்கியல் கற்கை போன்றவற்றினூடாக மருத்துவ ஆளணி வளங்கள் பெருக்கப்பட்டன. பொது மக்களில் இருந்து தேர்வு செய்யப்பட்ட ஆண்களும், பெண்களும் இந்த கற்கைநெறிகளைத் தொடர்ந்தனர். இவர்களின் கற்றலை இலகுபடுத்த விடுதி வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

இறுதிப் போரரங்கில் மக்களின் மருத்துவப் பராமரிப்புத் தேவைகளை நிறைவு செய்வதில் இந்த ஆளணிகளே பெரிதளவு உதவின. இந்த மருத் துவர்களும் தாதியர்களும் போராளிகளாக மாறி இக்கட்டான நிலைமைகளில் கைகொடுத்தனர்.

ஓரிருவரைத் தவிர பெரும்பாலான அரச மருத் துவர்கள் யுத்தத்தின் நெருக்கடிகளின் போது வன்னியை விட்டு வெளியேறி விட்டார்கள்.

இடப்பெயர்வுகள்நடைபெற்றதாலும், ஆழ ஊடுருவும் படைகளினால் நோயாளர் காவு வண்டி கள் இலக்கு வைக்கப்பட்டதாலும், வைத்தி யர்கள், தாதிகள், சாரதிகள் நிர்வாகிகள் என அனைத்து நிலைகளிலும் பணியாளர்கள் கொல்லப்பட்டார் கள். மருத்துவமனைகளின் மீது மீண்டும் மீண்டும் விமானத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இந்த நிலை மைகள் அரச மருத்துவ ஆளணிகளின் பங்கை முற்றாக அப்புறப்படுத்தியது.

மக்களையும் போராளிகளையும் உயிர்கா க்கும் பணி முற்றுமுழுதாக விடுதலைப் புலி களின் மருத்துவக் குழாமின் கைகளில் தங்கியது.

குறைவான ஆளணியுடன் மிகையான காயத்தையும், நோயாளர்களையும் எதிர் கொண்டு அவர்கள் சேவையாற்றினர். இந்த நிலைமைகளில் மக்களிலிருந்து உணர்வுபூர்வமான உதவிக்கரங்கள் நீண்டதை இங்கு பதிவு செய்ய வேண்டும்.

அரச மருத்துவ அதிகாரிகள் இருவர் தமது மக்களுடன் நின்று இறுதிவரை சேவை செய்து உயிரை விடுவது உயர்வானது என வன்னியிலேயே நின்று விட்டார்கள்.

போரின் முன்னரங்குகள் நகர்ந்து முள்ளி வாய்க்கால்வரைவந்தபோதுமருத்துவமனைகளும் இடம்பெயர்ந்து கொண்டே வந்தன. சிக்கலான காயங்கள் உள்ளோர் சிகிச்சைகளின் பின் செஞ் சிலுவைச் சங்கத்தின் ஊடாக கப்பலில் ஏற்றப் பட்டு திருகேணமலைக்கு பராமரிப்புக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

மருத்துவமனைகளின் மீது தாக்குதல் தொடு க்கப்படாமல் இருப்பதற்காக செஞ்சிலுவைச் சங்க த்தால் இராணுவ தலைமைப்பீடங்களுக்கு அனுப் பப்பட்ட வரைபட ஆள்கூறுகள் சில மணி நேரங் களுக்குள் துல்லியமாக மருத்துவமனைகள் தாக்கப் படுவதற்கு உதவின. சூனியப் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டு மக்கள் செறிவாக குவிக்கப்பட்ட இடங்களைத் தேர்வு செய்து செறிவான தாக்குதல் களை தொடுத்தது இராணுவம். இதனால் மருத்து வமனைகள் பெரும் சவால்களை எதிர் கொண்டன.

இடம்பெயர் அரச மருத்துவமனைகளின் கூரைகளில் காட்டப்பட்ட செஞ்சிலுவை அடையா ளங்கள் போர் வேவு விமானங்களுக்கு மருத்துவ மனைகளை துல்லியமாக காட்ட, எறிகணைகள் இலக்குத் தப்பாமல் தாக்கின. வன்னியில் நடை பெற்ற செஞ்சிலுவைச் சங்கத்தின் போர்க்கால மருத்துவப் பட்டறையில் துல்லியமாக அறியப் பட்ட விடயம் யாதெனில், அரச தரப்பே மருத்துவ மனைகள் மீது தாக்குதல் நடத்தலாம் என்பதா கும்.

உடையார்கட்டு பாடசாலையில் அமைக் கப்பட்ட இடம்பெயர் கிளிநொச்சி மருத்துவ மனைக்கு, சுதந்திரபுரம் யுத்தமற்ற பிரதேச மக்கள் செறிவான தாக்குதல்களில் காயமடைந்த நிலை யில் அள்ளி வரப்பட்டனர். இதேவேளை வள்ளி புனத்தில் அமைக்கப்பட்ட முல்லைத்தீவு இடம் பெயர் மருத்துவமனையிலும் குவிக்கப்பட்டனர்.

வள்ளிபுனம் மருத்துவமனை மிகத்துல் லியமாக தாக்கப்பட்டு சத்திர சிகிச்சைக் கூடத்தி னுள் காயமுற்ற குழந்தைகள் உட்பட மக்கள் சத்திரசிகிச்சை மேசைகளிலேயே கொல்லப்பட் டனர். தாக்குதலுக்கு முதல் நாளில் தான் செஞ்சிலு வையினர் வரைபட ஆள்கூறுகளை பாதுகாப்பதற் காக எனக்கூறி எடுத்துச் சென்றனர். அப்போது இந்த ஆள்கூறு மருத்துவமனையை இலக்கு வைப் பதற்கே பாவிக்கப்படும் என கூறி வேண்டாமென மருத்துவ அதிகாரி ஒருவர் தடுக்க முயன்றார்.

திறன்மிக்க போரளியான மயக்கமருந்து நிபுணர் செல்வி. அல்லி அவர்கள் வள்ளிபுனத்தில் காயமடைந்து உடையார்கட்டு மருத்துவமனையில் வீரச்சாவடைந்தார். இது உயிர்காக்கும் இய ந்திரத்தை பலமிழக்க வைத்தது.

உடையார்கட்டு மருத்துவமனை மீது நடாத்தப்பட்ட செறிவாக்கப்பட்ட ஆட்லறி தாக்குதல்க ளில் அதனைச் சுற்றி பாதுகாப்புக்காக கூடிய மக்கள் கொல்ல ப்பட்டார்கள். மருத் துவமனைக்கள் எறிக ணைகள் வீழ்கிறது என்ற செய்தியை சுகா தார உயர் பீடத்துக்கு தொலைபேசி மூலம் தெரியப்படுத்துவதால் நிறுத் திவிட முடியும் என கிளிநோச்சி சுகாதார அதிகாரி ஒருவர் மீண்டும் மீண்டும் முயன்றார்.

தொடர்ச்சி 14 பக்கம்

முள்ளிவாய்க்காலின் பின்னரான

ஈழத்தமிழர் வாழ்வியல் பிரச்சினைகளும்

எதிர்கொள்வதற்கான வழிமுறைகளும்

சு.யோ.பற்றிமாகரன்

விரிந்த செயற்திட்டமொன்றுக்கான ஆதார சுருதியுரை:

முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான ஈழத் தமிழ் மக்களின் வாழ்வியல் பிரச்சினை என்பது சிறீலங்கா, ஈழத்தமிழர்களாகிய தங்களின் உயிர்க்கும், உடைமைகளுக்கும், நாளாந்த வாழ்வுக்கும் ஏற்படுத்தி வந்த இனங்காணக் கூடிய அச்சத்தில் இருந்து தங்களை முப்பது ஆண்டு காலமாகக் காத்து வந்த தங்களின் நடைமுறை அரசின் ஆயுதங்கள் மௌனித்த சூழ்நிலையில், யுத்தக் குற்றச் செயல்கள், மனிதாயத்திற்கு எதிரான குற்றங்கள், இன அழிப்பு என்னும் முப்பரிமாண படை பலத் திட்டத்தின் மூலம், மீளவும் தங்களின் அரசியல் பணிவை ஆயுத முனையில் பெறும், அதே அரசின் கீழ் எப்படித் தங்கள் உயிரையும் உடமைகளையும் நாளாந்த வாழ்வையும், சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம் என்ற அடிப்படையில் பேணுவது என்பதேயாகும்.

ஆயுதங்கள் மௌனித்த புதிய நிலையில் சமூக ஒன்று திரட்டலே பாதுகாப்பு தரும். எந்த சிங்கள பௌத்த பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்றசர்வாதிகாரசனநாயகத்தால்தங்களின் பத்திலொரு பகுதி மக்கள் தொகை இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டதோ, அதே சிங்கள பௌத்த பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்றச் சர்வாதிகார சனநாயகத்தில் எந்த மாற்றமும் இன்றி அது இன்னும் வேகப்பட்டிருக்கும் நடைமுறை யதார்த்த நிலையில், ஈழத்தமிழ் மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அமைந்த அரசென உலக நாடுகள் கூறும் சிறீலங்கா அரசாங்கத்திடம், அவர்களால் தங்களுக்கான அமைதியான பாதுகாப்பையோ வளர்ச்சிகளையோ பெற்றுக் கொள்ள இயலாதுள்ளது.

இதனை உறுதி செய்யும் வகையில், இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை, அரசியல் அதிகாரப் பரவலாக்கல் என்ற பேச்சுக்கே இடமில்லை, சிங்கள பௌத்த பேரினவாதம் எதனைச் செய்கிறதோ அதனை ஏற்று வாழவைப்பதே அரசின் கொள்கையும் கோட்பாடும் அதனை எவ்விதத்திலும் மீறி பெரும்பான்மையினர்க்கு எதிராகச் செயற்பட முடியாது, இலங்கையின் தேசிய கீதம் கூட தமிழில் பாடப் படக் கூடாது, இலங்கையில் சிறீலங்காப் படைகளின் மனிதாயத்திற்கு எதிரான குற்றங்கள், யுத்தக் குற்றங்கள், இனஅழிப்பு என்பவற்றால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி விசாரணைகளோ பாதிப்புற்றவர்களின் கிட்டிய குடும்ப உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வோ கிடையாது, அவை யாவுமே யுத்தத்தின் விளைவாகக் கருதப்பட வேண்டும், என்றெல்லாம் இலங்கையிலும் இந்தியாவிலும் ஐக்கிய நாடுகள் சபை முன்பும் பிரகடனப்படுத்தி வரும் சிறீ லங்கா அரசாங்கத்தை எப்படி அவ் அரசாங்கம் ஈழத் தமிழர்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அமைந்த அரசாங்கம் எனக் கருத முடியும்? என்று எண்ணுகையில், ஈழத்தமிழர்களின் வெளியக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அம்மக்கள் தங்களின் நாளாந்தப் பிரச்சினைகளை உலக நாடுகள் இடம் எடுத்துக் கூறியே தீர்வு பெற வேண்டிய நிலை இன்றைய அவர்களின் யதார்த்த நிலையாக உள்ளது.

இந்தப் புதிய சூழ்நிலையை ஈழத்தமிழ் மக்களின் 'சமூக ஒன்றுதிரட்டல்'(Social Mobilization) வழியாக அவர்களை ஓரணியில் நிற்க வைத்து, அவர்களின் நாளாந்த வாழ்வின் பிரச்சினைகளை அனைத்துலக மக்களுக்கும், அனைத்துலக அமைப்புக்களுக்கும் அனைத்துலக நாடுகளுக்கும், உண்மையும் நேர்மையுமான முறையில் உடனுக்குடன் தெரிவிப்பதற்கான சனநாயக வழிகள் மூலம் அவர்களை எடுத்துரைக்க வைப்பதன் மூலமே பெற வைக்கலாம். இதற்கு உதவ வேண்டிய கடமையும் பொறுப்பும் உள்ளவர்களாக உலகெங்கும் உள்ள புலம்பெயர் தமிழர்கள் உள்ளனர்.

சமூக ஒன்று திரட்டலுக்கான படிமுறைகள் வழியாக உருவாவதே சிறந்த தலைமை. சமூக ஒன்று திரட்டலுக்கு, மக்களின் சமூக, பொருளாதார, அரசியல், ஆன்மிக தேவைகளைக் கண்டறிதல், அந்தத் தேவைகளின் அடிப்படையில் திட்டமிடல், அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தக்கூடிய ஆட்பலத்தையும், நிதிவளத்தையும், கருவிகளையும் இணைத்தல், செயற்பாட்டின் தடை களையும் வளர்ச்சிகளையும் கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் என்னும் படிமுறைகள் மக்கள் சார்பான கீழிருந்து மேலான அணுகுமுறை மூலம் செய்யப்பட வேண்டும்.

இதனை வறுமையையும் அறியாமையையும் அகற்றுவதற்கான அடித்தளப் பணிகளில் இருந்து ஆரம்பித்து, சமுதாயக் கூட்டங்களைக் கூட்டி, பங்கேற்பவர்களுக்கு அவர்களின் நடிபங்கு குறித்த பயிற்சிகளை அளித்து, ஒன்று திரட்டல் செயற்பாடுகளை வேகப்படுத்தி, அதனை மதிப்பீடு செய்து, தேவையான முறையில் மீளமைத்து, சமூகத்தை மையமாகக் கொண்ட மக்கள் அமைப்பினை உருவாக்க வேண்டும்.

இந்த அமைப்பை மக்களுடன் ஒருங்கிணைத்தல் மூலம் சமூகத்தைப் படித்து, பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்து, அதன் அடிப்படையில் விரிவான தற்காலிக திட்டமிடல் ஒன்றை அமைத்து, அதனைச் செயற்படுத்தக் கூடிய மையக்குழுவை உருவாக்கி, தொடங்கப்பட்ட அடித்தளப் பணிகள் தொடர்ச்சியாகவும் வளர்ச்சியாகவும் அமையும்படி முகாமைப்படுத்துகையில் தான் சமூக ஒன்று திரட்டல் என்பது மக்களுக்குச் சத்தியளிக்கும் ஒன்றாகவும் சமூக விலக்குகளை சமூக உள் வாங்கல்களாக மாற்றும் வல்லமை வாய்ந்ததாகவும் அமையும். இந்த சமூகத்தை ஒன்று திரட்டும் பணி சிறிய குழுக்களாகத் தொடங்கப்பட்டு அவைகளின் வெற்றிகளால் நம் பிக்கை யூட்டப் படல் அவசியம்.

இந்த நம்பிக்கையின் அடிப்படையில் பெருங்குழுக்களாக அவை இயல்பான வளர்ச்சி பெறுவதை ஊக்குவிக்க வேண்டும். அப்பொழுது தான் இந்த சமூக ஒன்று திரட்டல் பணியில் ஒவ்வொருவரும் அக்கறையும் ஆர்வமும் கொண்டு இணைந்து விடாமுயற்சியுடனும் நிலைப்படுத்தும் வேகத்துடனும் செயற்படுவர். இந்த உளப் பலமே மக்கள் சார்பாகப் பேரம் பேசும் ஆற்றலை இயல்பாகத் தோற்றுவிக்கும். இந்த விட்டுக் கொடாது பேரம்பேசும் ஆற்றலே உள்ளார்ந்த ஆற்றலுள்ள தலைவர்களைத் தோற்றுவிக்கும். இந்த சமூக ஒன்று திரட்டல் மூலமாக உருவாகும் உள்ளார்ந்த தலைவர்கள்தான் தன்னலத்தை மீறி பொது நன்மைக்காக உழைக்கும் சிறந்த சமூக பொருளாதார அரசியல் ஆன்மீகத் தலைவர்களாக இனங்காணப்படுவர்.

இந்தத் தலைமைகளின் வழியாகவே மக்கள் சார்பான மக்களுடைய பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் எந்த விட்டுக் கொடுப்பையும் செய்யாத சிறந்த தலைமை ஒன்று ஒரு பின்னடைவின் பின்னர் மீளவும் மக்களை முன்னோக்கி நகர்த்தத் தோன்றும்.

இந்த விட்டுக்கொடுக்காத தலைமை ஈழத் தமிழரிடை உருவாவதற்கு புலம்பெயர் ஈழத் தமிழர்கள் தாங்கள் வாழும் நாடுகளின் குடிமக்கள் என்ற உரிமையுடன் அந்த அந்த நாட்டின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப, ஈழத்தமிழ் மக்களை எல்லைப்பட்ட மக்கள்களாக *(Vulnerable people)* என்னும் இன்றைய நிலையிலிருந்து விடுவிக்க தம்மால் இயன்றதைச் செய்ய உறுதி கொள்ள வேண்டும்.

புலம்பெயர் தமிழர்களின் தாயக உதவிகளின் முள்ளிவாய்க்கால் பின்னரான முக்கியத்துவம்

சிறீலங்கா அரசாங்கம் திட்டமிட்ட வகையில் இலங்கையில் ஈழமக்கள் மேலான இன அழிப்பு யுத்த நடவடிக்கைகளால் பாதிப்புற்ற மக்களை எல்லைப்படுத்தப்பட்ட மக்களாக *(Vulnerable people)* மாற்றுவதன் மூலம் அவர்கள் மட்டுமல்ல அவர்களின் சந்ததிகள் கூட போராட்ட குணமில்லாதவர்களாக மாற்றப்பட வேண்டுமென்னும் செயற்திட்டத்தையும் மிகக் கவனமாக நடைமுறைப்படுத்தியது.

ஈழத்தமிழர்களிடை தாழ்வுச்சிக்கலை *(Inferiority complex)* வளர்க்கும் அதே வேளையில், சிங்கள பௌத்தர்களிடை உயர்வுச் சிக்கலை *(Superiority Complex)* ஊக்குவித்து அதன் வழி, ஈழத்தமிழர்களுக்கு குரல் கொடுக்க முடியாத *(voiceless)* மக்களாகத் தாம் மாறிவிட்டார்கள் என்றும், தம்மேல் யாராலும் அக்கறை காட்ட இயலாது என்பதுமான சமூக உளவியலை உருவாக்குவதன் மூலம்,

தொடர்ச்சி *11* பக்கம்

உயிருடன் வருவோம் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கவில்லை

விமலராஜா ஜெயராணி

கேள்வி

முள்ளிவாய்க்கால் இனவழிப்பை நேரில் கண்டு அனுபவித்த போது உங்கள் மனதில் தோன்றிய எண்ணங்களை சில வரிகளில் கூற முடியுமா?

பதில்:

நாங்கள் யாருமே உயிருடன் வருவோமா என்ற நம்பிக்கை சிறிது கூட இல்லை. காரணம் பதுங்கு குழிக்குள் இருந்து வெளியே வரமுடியாது. எங்கும் மரண ஓலம். வார்த்தைகளால் சொல்ல முடியாது. இறுதிச் சண்டையில் காலில் குண்டு, வலது கையில் குண்டு, கை பின்பக்கம் திரும்பி இருக்கிறது. கழுத்தளவு தண்ணீர். எழும்பி வர முடியவில்லை. அதிகாலை 2.30 மணியளவில் காயம் வந்து விட்டது. காலை 9.00 மணிவரை தண்ணீரில் தான் கிடந்தேன். உயிரோடு மீளு வோம் என்ற நம்பிக்கை சிறிதுகூட எனக்கு இல்லை. இது தான் எனது இறுதி நிமிடம் என்று கூட எண்ணினேன். காரணம் இரத்தம் போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் தண்ணீர் உப்புத் தண் ணீர் என்றதால் இரத்தம் போகும் வீதம் சற்றுக் குறைவாக இருந்தது. இதற்கு மேல் சொல்ல முடியவில்லை

கேள்வி:

இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் வந்த போது உங்கள் மனநிலை எவ்வாறு இருந்தது?

பதில்:

உடுத்த உடையோடு காயத்தோடு எங்களை இராணுவம் எடுத்து, காயத்திற்கு மருந்து கட்டி, ஆஸ்பத்திரியில் போட்ட போது நினைத்தோம் இனி நாம் உயிர் பிழைத்து மீண்டு விட்டோம் என்று. ஆனால் அந்தக் காயப்பட்ட வலிகளோடும் காத்திருந்தது தடுப்பு முகாம் சிறைச்சாலை. அத்த னையும் தாண்டி தான் மீண்டோம்.

கேள்வி:

முள்ளிவாய்க்கால் அவலம் நடந்தேறி 11 வருடங்கள் ஆகிய நிலையில் தாங்கள் வலிகளை அனுபவித்த ஒரு தமிழர் என்னும் வகையில் தங்கள் எண்ணம் அல்லது ஏக்கம் என்ன?

பதில்:

இந்த இனவழிப்பு பல்லாயிரம் மக்கள், மாவீரர்களை இழந்து இருக்கிறோம். விரும்பியோ, விரும்பாமலோ இந்த போராட்ட காலத்தில் எங்களை அர்ப்பணித்து உடல் எங்கும் காயம். ஆனால் இத்தனையும் தாண்டி நாங்கள் சமூகத் துடன் இணைந்த போது இந்த சமூகம் காட்டியது பாரபட்சம் மட்டுமே. கதைப்பது, எங்களுடன் சேர்ந்து வாழ்வது என்றெல்லாம் பிரச்சினையாக இருந்தது. நாங்கள் அடி மட்டத்தில் விழுந்து விட்டு எழும்புவது என்பது. வார்த்தைகளால் சொல்ல முடியாது. எங்களுக்கு வழிகாட்டி, முன்னேற்றி விட யாரும் இன்று வரைக்கும் முன்வரவில்லை. ஆனால் எங்களுடைய தன்னம்பிக்கையால் தான் இந்த ளவிற்கு இருக்கிறோம்

யாரையும் காப்பாற்ற முடியாத நிலையில் சாவுடன் வாழ்ந்தோம்

ஜெயவனிதா
வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி

போரின் இறுதி நாட்களில் முள்ளிவாய் க்காலில் பதுங்கு குழிக்கு வெளியே வந்தால் இறந்து விடுவோம் என்ற நிலைதான் இருந்தது.

எந்த நேரமும் எறிகணை வந்து கொண்டே தான் இருக்கும். நாங்கள் மே 16ஆம் திகதியே முள்ளிவாய்க்கால் பகுதியை விட்டு வட்டுவாகல் பாலத்திற்கு வந்தோம். அதற்கிடையில் எத்தனை யோ மக்கள் இறந்து விட்டார்கள். நாங்கள் பதுங்கு குழியை விட்டு வெளியே வராதபடியால் நாங்கள் பாதிக்கப்படவில்லை.

இராணுவத்தினர் எங்களிடம் வந்து இனி பிரச்சினை இல்லை. உங்களுக்கு எந்தவித பாதி ப்பும் வராது. உங்களை நாங்கள் முகாம்களுக்கு கொண்டு செல்லவுள்ளோம் என்று வலுக்கட்டா யமாகவே கொண்டு வந்தார்கள். பாலத்தின் இரு பக்கங்களிலும் எங்களின் உறவுகளின் பிணங்கள் தான் காணப்பட்டன. ஒன்று செருப்புடன் இருக் கும் ஒன்று செருப்பு இல்லாமல் இருக்கும். ஒன்று உடையுடன் இருக்கும், ஒன்று உடை இல்லாமல் இருக்கும்.

நாங்கள் முல்லைத்தீவிற்குள் வந்ததுமே நாங்கள் உயிர் பிழைத்தது போல் இருந்தது. எங்களுடன் வந்த ஒரு பெரியவர் நாங்கள் பதுங்கு குழிக்குள் இருந்த போது அருகில் இருந்தவர். ஷெல் வந்தது. பின்னர் பார்த்தல் அவரின் குடல் தன் அந்த இடத் தில் இருந்தது. காப்பாற்றுங்கோ என்றால் யாரை யார் காப்பாற்றுவது?

முள்ளிவாய்க்காலின் ... தொடர்ச்சி...

அவர்களை பேசாமல் இருந்தாலே போதும் என்னும் கலாச்சாரத்துள் *(Culture of Silence)* வாழ வைத்து, சிங்கள பௌத்த அரசாங்கத்தில் முற்று முழுதாகத் தங்கி வாழும் நிலையை *(Dependency)* ஏற்படுத்துதல் மூலம் அடக்கி ஒடுக்கி ஆளும் தந்திரோபாயத்தையும் அரசியல் செயற்திட்டமா கக் கையாளத் தொடங்கினர்.

இந்தச் செயற்திட்டத்தின் அதி முக்கிய இலக்காகவே தாயக ஈழத்தமிழ் மக்களையும் புலம்பெயர் ஈழத்தமிழ் மக்களையும் பல்வேறு முறைகளில் பிளவுபடுத்துதல் நடைமுறைப்படு த்தப்பட்டது.

இதற்காகப் புலம்பெயர் ஈழத்தமிழ்மக்கள் பயங்கரவாதத்திற்கு துணை செய்பவர்கள் என்ற கருத்தியல் ஒன்றை உலகெங்கும் பரப்புரை செய்து புலம்பெயர் ஈழத்தமிழ் மக்களின் தாயகம் நோக்கிய சுதந்திரமான ஈடுபாடுகளையும், அக்க றைகளையும், உதவிகளையும் அவரவர் வாழும் நாடுகளிலேயே மட்டுப்படுத்துவித்தல், அல்லது தடை செய்வித் தல் என்பதை அரசாங்கங்களுடன் அரசாங்கம் என்கிற உட்தொடர்பு மூலம் சாதி த்தல், புலம்பெயர் நாடுகளில் உள்ள ஈழத்த மிழர்களின் தாயகம் குறித்த உதவிகளைச் செய்யும் எல்லா அமைப்புகளு க்குள்ளும் அவ ர்களது நேர்மையான செயற்பாடுகள் குறித்த சந் தேகங்களையும், சகோதரத்துவப் பகைமைக ளையும், செயற்பாட்டாளர்கள் மேல் வெறுப் புகளையும் இயலுமான அளவுக்கு வளர்த்தல், போன்ற பலவித தந்திரோபாயங்களை சிறீலங்கா இன்று வரை தொடர்கிறது.

இதன்வழி புலம்பெயர் மக்களின் வழி காட்டல்கள், உதவிகள் தாயகத்தில் உள்ள ஈழத்தமிழ் மக்களுக்கு உரிய காலத்தில் உரிய முறைகளில் கிடைக்காதவாறு தடுத்து, ஈழத்தமிழ் மக்களை எல்லைப்படுத்தப்பட்ட *(Vulnerable people)* மக்களாகவே தொடர்ந்து வாழவைக்க சிறீலங்கா இன்று வரை தொடர்ந்து முயற்சித்து வருகின்றது.

இந்நிலையில் புலம்பெயர் தமிழர்கள் தாங்கள் வாழும் நாடுகளில் உள்ள அரசுகளுக்கு ஈழத்தமிழரின் நாளாந்த வாழ்வில் அவர்களின் எல்லைப்படுத்தப்பட்ட நிலையை எடுத்துரைப்ப தற்குப் புலம்பெயர் தமிழர்கள் ஒரு அணியில் தம்மை இணைத்து பொதுவான செயற்திட்டம் ஒன்றை உருவாக்கி, பொது வேலைத் திட்டங் களை தங்களிடை உள்ள மாறுபாடுகள், வேறு பாடுகள் அதற்குத் தடையாக அமையாதவாறு, ஒருவருக்கொருவர் தங்களுக்குள் உள்ள மாறுபாடு களை மதித்து *(Value the Diversity)*, பொது வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முழுமூச்சுடன் ஒத்து ழைக்க வேண்டும்.

இந்நேரத்தில் புலம்பெயர் ஈழத்தமிழ் மக்க ளுக்கான இலாப நோக்கற்ற முழுநேர காணொ ளி கேளொலி நாளிதழ் உட்பட்ட திரள்நிலைச் சாதனம்*(Mass Media)* முதன்மை பெறுகிறது. புலம் பெயர் தமிழர்களுக்கான வங்கி ஒன்றும் நடை முறைச் செயற்பாட்டுக்கு அவசியமாகிறது.

இவ்விடத்தில் புலம்பெயர் தமிழர்கள் தாய கத்தில் ஈழத்தமிழ் மக்களின் சமூக ஒன்று திரட்டலுக்குத் தனித்த நிலையிலும் சிறுசிறு குழுக்களுக்கு அவர்களின் தேவைகளைக் கண்ட றிந்து உதவி அங்கு மாற்றங்கள் இயல்பாக வெற்றி கரமாக நடைபெறுகிறது என்பதனைப் புலத்தில் உள்ள ஈழத்தமிழ் மக்களுக்குச் சான்றா தாரப்படுத்தும் பொழுது தான் நம்பிக்கை, தொண்டார்வம் என்பவற்றுடன் மூலவளப் பகிர் வுகளுக்கான தொழில்நுட்ப உதவிகளுக்கான அறிவியல் பரிமாற்றங்களுக்கான மனிதவலு இணைப்புகளுக்கான மன உந்துதல்களும் வேகம் பெறும்.

சிறியதாக இணைந்து பெரியனவற்றைச் செய்து அரியனவற்றையும் செய்ய முடியும் என நிரூபித்து எங்கள் உடன் பிறப்புக்கள் எல்லைப்படு த்தப்பட்ட மக்களாக வாழும் நிலையை மாற்று வோம்.

உசாத்துணை :- விக்னராணி. பா, சமூக ஒன்றுதிரட்டல். மானுடம் சமூகவியல் ஏடு. (2000). 3 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். பக். 31.

• • •

தொடரப்படக் கூடிய இடத்தில் விடப்பட்ட போதும்

தொடரப்படாத போராட்டம்

வேல்ஸ் இல் இருந்து அருள்

போர் உக்கிரமாக இடம்பெற்ற 2009ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதமளவில் போரின் போக்கு சிங்கள தேசத்தின் பக்கம் திரும்பியிருந்தது. தமிழ் இனத்தின் மீதான சிறீலங்கா அரசின் இனஅழிப்புக்கு 30 இற்கு மேற்பட்ட நாடுகள் உதவிகளை வழங்கியது தமிழருக்கு படைத்தரப்பு ரீதியாக பாரிய பின்னடைவைக் கொடுத்தது.

போரை எவ்வாறு தலைவர் பிரபாகரன் அவர்கள் நிறைவு செய்யப் போகின்றார் என்ற பதற்றம் தமிழ் மக்களிடம் இருந்தது.

ஆனால் அனைத்துலக சமூகம் உன்னிப்பாக அவதானிக்கும் அல்லது பங்கெடுத்துள்ள இந்த போரில் சிங்கள அரசுகளின் இனஅழிப்பு முகத்தை ஆதாரங்களுடன் வெளிக்கொண்டு வருவதன் மூலம் அனைத்துலகம் இறுகப் பற்றிப் பிடித்து வரும் மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றம், இனஅழிப்பு என்ற பாதைகளின் ஊடாக தனது விடுதலைக்கான அடுத்தகட்ட நகர்வை தமிழ் இனம் மேற்கொள்ளும் என்று தலைவர் எண்ணியிருப்பார்.

அதற்கான தடயங்களை இனஅழிப்பு அரசு விட்டுச் செல்லும் என்பதும் அவருக்கு தெரியும். அவர் எதிர்பார்த்தது போல சிறீலங்கா அரசு தனது இனஅழிப்பை ஆதாரங்களுடன் மேற்கொண்டது, வைத்தியசாலைகள் மீதான தாக்குதல், வலிந்து காணாமல் ஆக்கப்படுதல், சரணடைந்தவர்களை நீதிக்குப் புறம்பாக படுகொலை செய்தல், பாலியல் துன்புறுத்தல்கள் என சிறீலங்கா மேற்கொண்ட இனஅழிப்பு ஏராளம்.

அதற்கான சாட்சியங்கள் சேகரிக்கப்பட வேண்டும், அதற்கான உதவிகளை மேற்குலக நாடுகள் அல்லது அவர்கள் சார்ந்த அமைப்புக்களே மேற்கொள்ள முடியும், ஏனெனில் அதன் ஊடாகத் தான் அவர்களின் பூகோள கேந்திர அரசியல் நகர்வதுண்டு.

எனவே தான் ஐ.நா மனித உரிமைகள் அமைப்பில் ஒருபோதும் இணைய விரும்பாத அமெரிக்கா, போரின் போக்கு சிறீலங்கா அரசின் பக்கம் திரும்பிய போது 2008ஆம் ஆண்டு மனித உரிமைகள் அமைப்பில் இணைந்து கொண்டது.

அன்று நாம் பலமாக இருந்த போது உலகத்திற்கு எமது தேவை இருந்தது, எனவே போர் நிறுத்தத்திற்கான நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன, ஆனாலும் இந்தியா என்ற பிராந்திய சக்தியை மீறி அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

எனினும் தமது அடுத்த கட்ட நகர்வாக போர்க்குற்ற ஆதாரங்களை சேகரிக்கும் பணியை முடுக்கி விட்டிருந்தனர். அதனை சேகரித்தவர்கள் எல்லோரும் உலகில் இடம்பெற்ற போர்க்குற்ற விசாரணைகளில் பங்குபற்றிய மிகவும் தரம் வாய்ந்த அதிகாரிகள். உதாரணமாக சிறீலங்கா படையினரே அதிகளவில் தமிழ் மக்களை படுகொலை செய்திருந்தனர் என்ற உண்மையை 2014ஆம் ஆண்டு அனைத்துலக குற்றவியல் சான்றுக்கான வேலைத்திட்டம் என்ற அமைப்பு வெளியிட்டிருந்தது.



இந்த அறிக்கையை யூகோஸ்லாவாக்கியவில் இடம்பெற்ற போர்க்குற்ற விசாரணைக்குத் தலைமை வகித்த திரு ஜேன் ரல்ஸ்ரன், பிரித்தானியா மிடில்செக்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும், சியராலியோனில் உண்மைகளைக் கண்டறிதலும், இன நல்லிணக்கப்பாடும் என்ற குழுவில் பணியாற்றிய வருமான வில்லியம் செபாஸ், காசாவில் உண்மை களைக் கண்டறியும் குழுவில் பணியாற்றிய ஓய்வு பெற்ற கேணல் டெஜ்மொன்ட் ரவாஸ் மற்றும் சிறீலங்காவில் போர் இடம்பெற்ற போது அங்கு ஐ.நா தூதுவராக பணியாற்றிய கோடன் வைஸ் என்பவர்கள் தயாரித்திருந்தனர்.

இது, சிறீலங்கா மீதான போர்க்குற்ற விசாரணையை மிக அண்மையாக கொண்டு வந்துள்ளதாக அவுஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்ட பொது சேவைகள் நீதிமையம் (PIAC) அன்று தெரிவித்திருந்தது.

தரம் வாய்ந்த அதிகாரிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கைகள் மற்றும் சேகரிக்கப்பட்ட ஆதாரங்கள் எல்லாம் அன்றைய சிறீலங்கா அதிபர் மகிந்த ராஜபக்சாவின் சகோதரர் கோத்தபாய ராஜபக்சாவுக்கு எதிரானது என 2014ஆம் ஆண்டு ஜூன் மாதம் வெளிவந்த வோசிங்டன் ரைம்ஸ் தெரிவித்திருந்தது.

அதேசமயம், பின்லாந்து நாட்டின் முன்னாள் அரச தலைவரும், நோபல் பரிசு பெற்றவரும், கம்போடியாவில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பில் விசாரணைகளை மேற் கொண்டவருமான தேமி சில்வியா காட்ரைட் தலைமையில் அமைக்கப்பட்ட குழு ஒன்றும் சிறீலங்காவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற் கொண்டிருந்தது.

சனல் 4 தொலைக்கட்சி, பிற்றர் சார்க்ஸ், பிரித்தானியாவை தளமாகக் கொண்ட சன்டே ரைம்ஸ் பத்திரிகையில் பணியாற்றிய காலம் சென்ற அமெரிக்காவைச் சேர்ந்த ஊடகவியலாளர்

போரின் பின்னரான தேடுதல் மற்றும் துப்புரவு என்ற போர்வையில் சிறீலங்கா படையினர் பாரிய அளவிலான படுகொலைகளை மேற்கொண்டதாகவும், அவ்வாறு கொல்லப்பட்டவர்களில் பலர் சரணடைந்தவர்களே எனவும் அனைத்துலக போர்க்குற்றவியல் வழக்கறிஞர் யூலியன் நோவல் தெரிவித்திருந்தார்.

சிறுவன் பாலச்சந்திரனின் இறந்த புகைப்படத்தைஆய்வு செய்ததடவியல்நிபுணர்பேராசிரியர் டெரிக், சரணடைந்த சிறுவன் எவ்வாறு அருகில் இருந்து சுடப்பட்டார் என்பதை ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார். பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட குற்றத் தடயவியல் நிபுணர் பேராசிரியர் பௌண்டரும் அதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஐ.நா அமைத்த மூவர் கொண்ட நிபுணர் குழுவும் 70,000 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தியிருந்தது. விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் மற்றும் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஆகியோர் சரணடைந்த பின்னர் படுகொலை செய்யப்பட்ட ஆதரங்களும் உள்ளன. இது தொடர்பான ஆதாரங்கள் ஐ.நா குழு, அனைத்துலக மன்னிப்புச்சபை, அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகம் என பல அமைப்புக்களிடம் உள்ள. அருட்தந்தை பிரான்ஸிஸ் ஜோசப் காணாமல் போனதும் இதில் அடங்கும்.

முன்னர் ஐ.நா நிபுணர் குழுவில் பணியாற்றிய வரும் உண்மைக்கும் நீதிக்குமான அனைத்துலக செயற்திட்ட அமைப்பின் பணிப்பாளருமன ஜஸ்மின் சூக்காவும் பெருமளவான ஆதாரங்களை சேகரித்து வருகின்றார்.

அதாவது பெருமளவான ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான உயிருள்ள சட்சியங்களும் உலகம் எங்கும் பரவி வாழ்கின்றனர். ஐ.நாவும் பல தீர்மானங்களை கொண்டு வந்திருந்தது.

தொடர்ச்சி 17 பக்கம்

நான் பெரிது நீ பெரிது என்ற போட்டியில் எம்மினம் சிதறுண்டு கிடக்கின்றது

கேள்வி:

முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் போது உங்கள் மனதில் தோன்றிய எண்ணங்களை சில வரி களில் கூற முடியுமா?

பதில்:

எனக்கு போராட்டத்தினை பற்றிய தெளிவான அறிவு இல்லை. வன்னிப்பகுதியில் 2006 இல் குடியேறியிருந்தேன். பின்னர் முள்ளிவாய்க்கால் வரை சென்ற போது தான் என்னுடைய இனம் கண் முன்னே ஒவ்வொரு நிமிடமும் அழிவடைந்து சென்றதனை பார்த்த போது இந்த போராட்டம் நியாய மான விடுதலைப் போராட்டம் என்ற தெளிவு என்னுள் நிரந்தரமாக ஏற்பட்டது. அவலத்தை தந்த வனுக்கே அதனை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற வெறி என்னுள் ஏற்பட்டது. நான் அப்போது 4 மாத கைக்குழந்தையுடன் இருந்தமையினால் என் னாலே ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்க நிர்பந்திக்கப்பட்டேன்.

கேள்வி:

இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் மக்கள் வந்த போது உங்கள் மன நிலை எவ்வாறு இருந் தது?

பதில்:

என்னுள் அறிய முடியாத ஒரு குழப்பமும், என்னால் எனது இனத்திற்கு ஒன்றும் செய்ய முடியவில்லையே என்ற கையறு நிலையினையும் உணர்ந்து அழுகை வந்ததுடன். சிங்கள இராணுவம், கருணா குழுக்களின், இந்திய இராணுவ அதிகாரிகளின் விசாரணைகளும் பெண் என்ற நிலையில் என்னை மிக்க அச்சத்திற்கு உள்ளாக்கியது. எமது குழந்தைகள், பெண்கள் என்று வயது பேதமின்றி கொன்றுவிட்டு எமது இனத்தின் பிணத்தின் மீது மே 18 2009 அன்று பால் சோறு செய்து சிங்கள இராணுவம் கொண்டாடியதனை பார்த்த போது, நாங்களும் சிங்கள பேரினவாதத்தினை வெற்றி கொண்டு எப்போது எமது வெற்றியினை கொண்டாடுவோம் என்ற வெறி என்னுள் ஏற்பட்டது.

கேள்வி:

முள்ளிவாய்க்கால் அவலம் நடந்தேறி 11 வரு டங்கள் ஆகிய நிலையில் தாங்கள் ஓர் தமிழர் எனும் வகையில் தங்கள் எண்ணம் அல் லது ஏக்கம் என்ன?

பதில்:

போர் சிங்களவனால் வெற்றி கொள்ளப்பட்டு 11 ஆண்டுகள் கடந்தும் எமது தமிழ் இனம் எதனையும் வெற்றிகரமாக சாதிக்கவில்லை. இதனைப் பார்க்கும் பொழுது 2006ஆம் ஆண்டு கிளி நொச்சி சேரன் உணவகத்திற்கு முன்னால் ஒரு

கீறிஸ்டினா மனோ

வானளவான புகைப்படம் காட்சிப்படுத்தப்பட்டது நினைவிற்கு வருகின்றது. அதில் ஒரு குழந்தை முள்ளுக்கம்பியில் பிடித்துக்கொண்டு "அண்ணா மாரே அக்காமாரே போரினை எம்மீது திணிக்காதீ ர்கள்" என்ற வாசகம் சொல்லிச் சென்ற கதை 11 வருடங்கள் கடந்தும் இன்றும் தொடர் கதையாக உள்ளது .

இதற்கு நான் பெரிது நீ பெரிது என்ற போட்டியில் எம்மினம் சிதறுண்டு கிடப்பதே காரணம் ஆகும். இனியாவது உள்வீட்டு போட்டியினை விட்டு எறிந்து விட்டு நாம் ஒரு குழுவாக இல்லாது ஒரு இனமாக செயற்பட வேண்டும் என அனைவரையும் வேண்டுகின்றேன். இதை தவறும் சந்தர்ப்பத்தில் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சந்ததி யினையும் அழிவினை நோக்கி இட்டுசென்ற வர லாற்று தவறிற்கு அனைவரும் பொறுப்பாளியாக இருப்போம் என்பது உறுதி.

தொடர்ந்து, நிதீயை பெற போராட வேண்டும்

மயூரன் சிவானந்தன் நோர்வே

கேள்வி:

முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் போ து உங்கள் மனதில் தோன்றிய எண்ணங்க ளை சில வரிகளில் கூற முடியுமா?

பதில்:

இந்த இன அழிப்பை தாங்காது பொங்கி எழுந்த என் சகோதர/சகோதரிகளை அழித்தது மட்டும் இல்லாமல் பொது மக்களை வஞ்சக மாக பாதுகாப்பு வலையத்துக்குள் வரவழைத்து, திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டனர். இது வரலாற்று பக்கங்களில் ஒரு அழியாத வடு. தமிழ னாக, கனமான இதயத்துடன் வலிகளை சுமந்து நின்றேன்.

கேள்வி:

இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் மக்கள் வந்த போது உங்கள் மன நிலை எவ்வாறு இருந்தது?

பதில்:

உணர்வுகளையும் உடமைகளையும் இழந் தது மட்டும் இன்றி அவர்களின் உயிரைப் போன் றோர்களையும் இழந்தது போக எஞ்சியவர்கள்... அநாதைகள் இல்லை! சுதந்திர ஈழத்தில் இருந்து, அநாதைகள் ஆக்கப்பட்டவர் கள். இன்று வேறு நாட்டவர்கள் தத்து எடுக்கிறார்களோ.... என நினைத்தேன்.

கேள்வி:

முள்ளிவாய்க்கால் அவலம் நடந்தேறி 11 வருடங்கள் ஆகிய நிலையில் தாங்கள் ஓர் தமிழர் எனும் வகையில் தங்கள் எண்ணம் அல்லது ஏக் கம் என்ன?

பதில்

தீராத வலிகளை சுமக்கும் தமிழனாக... ஈழ தாகத்தை மட்டும் இன்றி உயிரை எங்களுக்காக அர்ப்பணித்த உறவுகளையும் மனதில் கொண்டு, நாங்கள் கொண்ட நோக்கத்தை மறவாதிருப்போம். அத்துடன் தொடர்ந்து, நிதீயை பெற போராட வேண்டும்.

முள்ளிவாய்க்கால் நினைவலைகள்...

முள்ளிவாய்க்காலில் இன்னும் உறங் காத ஆன்மாக்கள் கேள்விகட்கான ஒரு போரா ளியின் பதில்

தீருத்தணி (போராளி) லண்டன்

கேள்வி:

முள்ளிவாய்க்கால் இனவழிப்பை நேரில் கண்டு அனுபவித்த போது உங்கள் மனதில் தோன்றிய எண்ணங்களை சில வரிகளில் கூற முடியுமா?

பதில் :

குறுகிய நிலப்பரப்பு கொண்ட வெள்ளாம் முள்ளிவாய்க்கால் பகுதியில் மக்கள் தொகை அதிகரித்தது. பாதுகாப்பு வலயம் என அரசு அறிவித்த அந்த பகுதியில் தான் கடைசியாக மக்களின் பேரவலம் ஆரம்பமானது. அந்த பகுதிகளில் பாரிய குண்டுமழை பொழிந்த படியே படையினர் முன்னேறினர். அந்த பகுதியில் அகப்பட்ட நாம் உயிருடன் இருப்போம் என்று நினைக்கவில்லை. உணவு, குடிநீர், இருப்பிடம் இல்லை. பதுங்கு குழிகளில் தான் பல மாதங்கள் கடந்தது.

பதுங்கு குழி அமைக் கூட சாக்கு அல்லது யூரியா பைகள்கூட இல்லாத நிலையில் பெண்கள் அணியும் சாறிகளை சிறு சிறு பகுதியாக வெட்டி தைத்து அல்லது முடிச்சு போட்டு தான் பாதுகாப்பு மண் அரண்களை அமைத்து மக்கள் உயிர் பிழைத்தனர்...

கேள்வி:

இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் வந்த போது உங்கள் மன நிலை எவ்வாறு இருந்தது?

பதில்:

அனைவரையும் சுட்டு விடுவார்கள் என மனதில் தோன்றியது. ஆனால் உடனடி தேவையாக குடிநீர் தந்தார்கள். பிஸ்கட் தந்தார்கள். அது ஒரு வகையில் பட்டினியில் இருந்து மீண்டு வந்த போது பயத்தோடு கொஞ்ச ஆறுதல் இருந்தது. மறுகணம் யார் யார் வந்து எங்களைப் பிடித்து

தொடர்ச்சி 17ம் பக்கம்

நிலா இன்னும் நீதிக்காய் காத்திருக்கிறாள்

தணிகை இனியவன்

இயற்கை எழில் கொஞ்சும் கிளிநொச்சி மாவட்டத்தின் விநாயகபுரம் கிராமம் எமது வசிப் பிடம். அப்பா ஒரு போராளி அம்மா கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய ஆசிரியை. சிறுபிள்ளை பராயம் என்னை அம்மா தினந்தோறும் உந்துரு ளியில் சந்திரன் சர்வதேச பாடசாலைக்கு கூட்டிச் செல்வதும் பின்பு தனது பாடசாலைக்கு அழைத்துச் செல்வதும் என் வாழ்வின் பசுமை நினைவுகள்.

சிறீலங்கா படையினரின் கொலை வெறி த்தனமான ஆக்கிரமிப்பு நடவடிக்கையினால், 2008 செப்டம்பர் நடுப்பகுதியில் கிளிநொச்சி பகுதியை விட்டு வெளியேறி மக்களுடன் மக்களாக நாங்க ளும் விசுவமடு பிரதேசத்தை நோக்கி நகர் ந்தோம்.

சிறீலங்கா இராணுவத்தின் இடைவிடாத எறிகணை வீச்சும், அதிநவீன மிக், கிபிர் போர் விமானங்களின் குண்டு வீச்சுக்களும் தொடர இடம் பெயர்வுகளும் தொடரலாயின. நாங்கள் வலை ஞர்மடத்தில் இருந்த இந்த காலப்பகுதியில் எனது பள்ளித் தோழி நிலா தனது அப்பாவுடன் நாங்கள் இருந்த கொட்டகைக்கு வந்துவிட்டு போனவள்.

தாங்கள் புதுமாத்தளனில் இருப்பதாக சொன்னாள். அடுத்தநாள் வந்த செய்தி உயிர் நடுங்க வைப்பதாய் இருந்தது. இன்றுவரை மறக்க முடியாத என் இனிய தோழி..... அப்பகுதி நோக்கிய சிறீலங்கா படைகளின் எறிகணைத் தாக்குதலினால் அவளது குடும்பத்தில் நிலா, அவளது தங்கை நட்ச த்திரா, அவளது அம்மையா, மாமா என அனை வருமே உடல் சிதறி பலியாகி விட்டனர். அவளது அம்மா பலத்த காயங்களுடன் உயிர் தப்பினர்.

நிலா..அவள் குடும்பம்.. அந்த இழப்பு. அந்த வயதிலேயே என்னுள் ஆழப் பதிந்து போனது .... இப்படி எத்தனை எத்தனை நிலாக்கள்..இன்னும் நீதிக்காய் எங்கும் ஆத்மாக்களாய் ...

தாங்க முடியாத துயருடன் 2009 மே!- நினைவில்

நாங்கள் சுவிற்சர்லாந்தில் வாழ்கின்றோம். ஆனால் எங்கள் சொந்த மண் 2009 இன் மே மாதம் சிறீலங்கா அரசின் ஈவிரக்கம் அற்ற தாக்குதலால் பேரவலத்தை கண்டது. அதை எண்ணி செய்வ தறியாது துடித்தோம். இந்த உலகில் இப்படி ஒரு இரக்கமற்ற கண்மூடித்தனமாக தாக்குதலைத் தொடுப்போரை நோக்கி நிறுத்து எனச் சொல்ல ஒருவரும் இல்லையே என்ற ஏக்கத்துடன் என்ன எங்களால் முடியும் என எம்மை நாமே கேட்டபடி வீதியில் கூட்டமாகக் கூடி குரல் கொடுக்க மட்டும் முடிந்தது. அந்தக் குரலும் எவர் செவிகளுள்ளும் புகவில்லை.

வயது வேறுபாடு இன்றியும் பால் வேறு பாடு இன்றியும் வன்னியின் கிழக்குக் கரையோரம் தமிழினப் பேரழிவை கொண்டதாக அன்றைய பொழுதுகள் காணப்பட்டன. மக்களை பாதுகாப்பு வலயம் போங்கள் எனச் சொல்லி விட்டு அரச படையினர் கடலாலும். தரையாலும் வானாலும் குண்டுகளை நெருப்பு மழையெனப் பொழிந்து கொன்றழித்தார்கள். அங்கு என்ன நடக்கின்றதென நாளாந்தம் அறிந்து தெரிந்தவர்களுடனும் எதுவும் பேசாமல் துயர் சுமந்த நெஞ்சுடனும் இந்த உலக நாடுகள் உண்மையில் அங்கே என்ன நடக்கிறதென அறிந்தும் அமைதியாய் இருப்பதைக் கண்டு சின த்துடனும் இருந்தோம்.

ஒன்று மட்டும் விளங்கியது உள்ளூர் மற் றும் பன்னாட்டு தொண்டு நிறுவனங்களையும் வெளியேற்றி விட்டு சாட்சிகள் அற்ற போரை செய்கின்றனர். இதன் மூலம் இந்தக் காலத்தில் உலகின் ஓர் பகுதியில் சிங்களப் பேரினவாத அரசு திட்டமிட்டு தமிழினத்தை அழிக்கிறது. ஆனால் இந்தப் பேரழிவால் மட்டும் இலங்கைத் தீவை அமைதி கொள்ள வைக்க முடியாது.

இன்று பதினொரு ஆண்டு கடந்து விட் டது இந்த நிலையிலும் தமிழர் தங்களின் இல க்கை நோக்கிப் பயணிக்கின்றனர். தமிழரின் ஆழ் மன விருப்பு நிறைவேறும் வரை அவர்கள் போரா டுவார்கள். பாதை மாறலாம் இலக்கு ஒன்று தான். இந்த உலகம் தமிழர் கோரும் நீதியான அரசியல் உரிமையை ஒரு நாள் ஏற்றாக வேண்டும். தங் களை அழிக்கின்றனர் எனவே எங்களைப் பாது காக்க நாங்கள் படையாகத் திரண்டோம் என்ற தமிழரை அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படு த்தாத நிலையில் பேரழிவை செய்து முடக்குவது

நட்புடன்- கனகரவி

சிங்களப் பேரினவாத அரசுக்கு நிரந்தர வெற் றியல்ல. இதனை சொந்த மண்ணில் இன்றும் போராடும் மக்கள் வெளிப்படுத்தி நிற்கின்றனர். தமிழரை அழித்து நீங்காத துயரை ஏற்படுத்தியோர் அவர்களின் அரசியல் உரிமையைக் கொடுக்காது அவர்களை வெல்ல முடியாது. அன்றைய நாளின் துயரை எண்ணுகையில் மனதில் இப்படிப் பல வருவது இயல்பானதாகத் தெரிகின்றது.

இறுதிவரை உறுதியுடன் ... தொடர்ச்சி...

தொலைபேசியினூடாக எறிகணைகளைதுல்லிய மாக மருத்துவமனை மீது திருப்பியிருக்கி றோம் என்பதை புரிந்து கொண்டபின் அந்த முயற் சிகளை கைவிட்டார் அந்த அதிகாரி. அவர்களது தாக்குதல்கள் அதன் மூலம் செறிவாக்கப்பட்ட போது ஒருதாதியும் கடமையின் போது காயமடை ந்து அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

கடமையில் இருந்த தமிழீழ மருத்துவக் கல்லூரி போராளி மருத்துவர் திருமதி. கமலினி அவர்கள் முள்ளிவாய்க்கால் சத்திர சிகிச்சைக் கூடத்தில் வைத்து எறிகணை வீச்சில் வீரச்சாவடை ந்தார். மக்களுக்கான மருத்துவ சேவையில் இருந்த வைத்தியர் சிவமனோகரன் அவர்கள் கொத்துக் குண்டுகளுக்குப் பலியாகிப்போனார். மூத்த மருத்துவப் போராளிகள் இறையொளி, செவ்வானம் கடமையில் இருந்தபடி வீரச்சாவ டைந்து போனார்கள். இவ்வாறு வீரச்சாவடைந்த மருத்துவ போராளிகள் அநேகர். பொஸ்பரஸ் எரிகுண்டுகள், கொத்துக் குண்டுகள், ஆர்.பீ.ஜீ எறி கணைகள், ஆட்லறி வீச்சுக்கள், விமானத் தாக்கு தல்கள் கண்ணுக்குத் தெரிந்த கடற்படைக் கப்ப ல்கள் ஏவிய குண்டுகள் வீழ்கின்ற நிலமைகளில் காப்புக்கள் அற்ற சூழலில் மருத்துவமனைகள் இயங்கிக் கொண்டு இருந்தன. அங்கு வெடிக்காமல் காலில் செருகிய நிலையில் இருந்த கொத்துக் குண்டு, ஆர்.பீ.ஜீ குண்டுகளை பெரும் ஆபத்துக்கு நடுவில் புதுமாத்தளனில் வெட்டியகற்றி உயிர் காக்கும் பணிகளை நிறைவேற்றினார்கள்.

(ஆர்.பீ.ஜீ தாக்குதலுக்கு உள்ளான பெண் தற்பொழுதும் உயிர் வாழ்கிறார்)

இரவு பகலாக பல்லாயிரக்கணக்கான காயங்களுக்கு மருத்துவச் சிகிச்சைகள் நடந்து கொண்டே இருந்தன. பகலில் பெண் மருத்துவர்களும் இரவில் ஆண் மருத்துவர் களும் பணியில் இருந்தார்கள். ஏனெனில் இந்த மருத்துவர்கள் தமது குழந்தைகளை இரவில் பராமரிக்க செல்ல வேண்டும். இடம் பெயர்வுகளில் மருத்துவர்களின் குடும்பங்கள் தங்களைத் தாங்களே உதவிகளின்றி நகர்த்த வே ண்டிய நிலை ஏற்பட்டது.

மருத்துவமனைக்குள் மருத்துவ ஆள ணியினர் காயமடைந்து நோயாளர்களாக பரா மரிக்கப்படத் தொடங்கினர். பலர் பின்னர் வீரச்சா வடைந்து போனார்கள். அதுவரை கடினமாக உழைத்த, தனது மூன்று குழந்தைகளையும் குண்டுவிச்சில் பலிகொடுத்த, மருத்துவர் இசைவாணன் தனது தொடை என்பு முறிவுடன் மற்றவர்களின் சுமை களை நினைத்து சயனைட் குப்பியைக் கடித்து வீரச்சாவைத் தழுவிக் கொண் டார்.

காயமடைந்த நிலையிலும் மருத்துவர்கள் மற்றவர்களின் உயிர்காப்பதற்காக கட்டுகளோடு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். சகமருத் துவ ஆளணிகள் வீழ்ந்து கொண்டிருக்க ஆண் பெண் மருத்துவ ஆளணி தங்களது உயிர்கள் மீது எந்த கவனமுமற்றோராய் இயந்திரங்களாக வேலைகளைக் கவனித்துக் கொண்டது. உடலங் களை அகற்றுவதில் ஈடுபட்ட தமிழீழக் காவல் துறை செயலிழந்து போக மருத்துவமனைகள் உடல்களால் நிரம்பத் தொடங்கியது. இப்படியாக மே மாதம் 15ம் திகதியுடன் மருத்துவ ஆளணி களின் செயற்பாடுகள் அனைத்தும் முடிவுக்கு வந்து விடுகிறது.

"எனது கடமைகளை நான் இறுதி வரை நிறைவேற்றுவேன்; உங்களது கடமை களை நீங்கள் உங்களது மக்களுக்காக நிறை வேற்றுவீர்கள் என முழுமையாக நம்பு கிறேன்" என்று இறுதிச் சந்திப்பில் கேட் டுக் கொண்ட தமிழீழ தேசியத் தலைவர் அவர் களின் நம்பிக்கையை இறுதிக்கணம் வரை காப்பாற்றியது தமிழீழ மருத்துவக் குழாம்.

• • •

மீளெழுச்சிக்கு விதையான முள்ளிவாய்க்கால்?

2002இல் சர்வதேச கண்காணிப்புடனும் எண்ணிலடங்கா சர்வதேச அரச சார் பற்ற நிறுவனங்களுடனும் வன்னியில் ஆரம்பித்த போர் நிறுத்த ஒப்பந்தமும் சமாதான பேச்சுவார் த்தைகளும், 5 வருடங்களில் இடப்பெயர்வுகளும் பதுங்கு குழிகளும் ஆக மாறியது.

கொலைகள் செய்வதற்கு வசதியாக 2009 ஏப்பிரலில் மாறி மாறி மூன்று "பாதுகாப்பு வலயங் கள்" தோன்றின. தொடர்ந்து மே-17-18 களில் செல் துண்டுகளை உடலில் எங்கும் தாங்கியபடி வெளி யேறிய வன்னி மக்கள் முள்ளுக்கம்பி வேலிக்குள் அடைப்பு. பிறகு என்ன? காணாமல் ஆக்கப்படு தலும், பாலியல் வன்புணர்வுகளும், வழக்குகள் இன்றி பல ஆண்டுகள் சிறையிலும் அகதி தஞ்சம் தேடி ஓடியவர்களும் மிருகங்கள் போல் வெளி நாடுகளில் துன்புறுத்தப்படுதலுமாக தொடர் கிறது எமது வாழ்க்கை.

பூகோள சக்திகளின் நன்மைக்காக, உரிமை கள் பறிக்கப்பட்டு, உலகமே புறம் தள்ளும் பெரிய வொரு மக்கள் தொகுதிக்குள் இன்று ஈழத் தமிழரும் இணைந்து விட்டார்கள். நாம் என்ன செய்யலாம்?

எம்மவர் மத்தியில் உள்ள உணர்வாளர் களின் செயற்பாடுகள் இன்று பல தளங்களில் விரிவ டைந்துள்ளன. மனிதாபிமான செயற்பாடுகளில் மோசமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக் கரம் நீட்டுவதில் இருந்து பள்ளிக்கூடங்கள், வைத்திய சாலைகளை சீரமைப்பது வரை இது நீள்கிறது. தொடரும் உரிமை மீறல்களை ஆவணப்படுத்தி ஐ.நாவிலும் ஏனைய அதிகார மையங்களிலும் அறி வூட்டும் வேலையையும் செய்கிறோம்.

போர்குற்றம், இனவழிப்பு சார்ந்த வழக்குக ளை உலகெங்கும் அவற்றை வழக்குகளாக ஏற்கும் நீதிமன்றங்களில் முன்னெடுக்க வேண்டும் என்று முனைபவர்களும் எம்மில் உள்ளார்கள். பூகோள அரசியல் சூழலில் மாற்றம் வரும் போது தாயகம்-தேசியம்-சுயநிர்ணயம் (தாதேசு) சாத்தியம். அது வரை இதை உயிரோட்டத்துடன் நாம் வைத்திருக்க வேண்டும் என்று சிந்திப்பவர்களும் எம்மிடம் உண்டு.

இவ்வாறு நாம் பல தளங்களில் இயங்குகிறோம். இத்தளங்களில் இயங்குபவர்கள் எல்லோருக்கும் போதியளவு ஒத்தியங்கும் செயற்பாடுகள் இல்லை என்ற மனக்குறையும் உண்டு.

பூகோள அரசியல் தெளிவின் தேவை

எங்கும் போலவே நமக்குள்ளும் கருத்து வேறுபாடுகள் இருப்பது ஒன்றும் பெரிய தீமை யல்ல. கருத்து வேறுபாடுகளுக்குள் இருந்துதான் பெரும் சக்திகள் வெளிப்படும். தாயக ஈழத்தமிழர் மத்தியிலோ அல்லது புலம் பெயர் ஈழத்தமிழர் மத்தியிலோ இனிவரும் சந்ததிகளில் அப்படியொரு சக்தி எழும்பும் சாத்தியங்கள் நிச்சயம் உண்டு. அவ்வாறு எழும்பும் சக்திக்கு பூகோள அர சியல் தெளிவு இல்லாவிட்டால்....

தமிழர் ஒருமையை முன்னிறுத்தி வளர் ந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்று தமிழரின் எதிரியாக செயற்படுகிறது. இது இன்று தெளி வாக தெரிகிறது. 2009 காலகட்டத்திலும் இது தெளிவாகவே தெரிந்தது. இருந்தும் அது நிலைத்து நிற்பதற்கு காரணம் பூகோள அரசியல் தெளிவு எமக்கு இல்லாததே. அதோடு இது தமிழரின் கூட்டு என்ற கருத்தாக்கம் தமிழர் மனதில் ஆழ மாக வேரூன்றி விட்டதும் ஒரு காரணம். அதை மாற்றுவதற்கு காலம் தேவை. அந்தக் காலத்தில் அதிகார சக்திகள் இதை தமது கருவியாக கையா ண்டு வருகிறார்கள்.

ந. மாலதி

இது போலத்தான் பூகோள அரசியலை புரியாது இனிவரும் காலத்தில் வளரும் தமிழர் ஒற்றுமையும் இருக்கும். இப்படி வளரும் ஒரு அமை ப்பும் தமிழர் எதிரியாக ஒரு காலத்தில் செயற்படும் சாத்தியம் அதிகம். **இவ்வாறு பூகோள அரசியல் புரிதலின்றி உருவாகும் தமிழர் ஒற்றுமை பற்றி நாம் பயத்துடனும் சந்தேகத்துடனுமே அணுக வேண்டும். ஏனெனில் ஆழமான பூகோள அர சியல் விளக்கம் அற்று வளரும் ஒற்றுமை பூகோள சக்திகளின் கருவியாக மாற் றப்படும் சாத்தியம் அதிகம். பூகோள சக்திகளின் ஒரு அம்சம்தான் ஐ.நாவும் என்பதை ஏற்றுக் கொள் ளும் புரிதலுக்கு பெரும்பான்மை தமிழர் இன்று கூட வர முடியாதுள்ளனர். சில வேலைகளுக்கு ஐ.நா சாத்தியமாக இருந்தாலும் ஐ.நாவை நம்பி வளரும் ஒரு தமிழர் கூட்டு மேலே சொன்ன காரணங்களுக்காக அபாயமானது.**

மேலோட்டமாக பூகோள அரசியலை பற்றி ஈழத்தமிழருக்கு ஓரளவு தெரியும். ஆனால் ஆழம் புரியாது. அண்மையில் இலத்தீன் அமெரிக்க வரலாற்று நூல் ஒன்றை படித்த ஒரு ஈழத்தமிழர் சொன்ன ஒரு வார்த்தை பூகோள அரசியலின் ஆழத்தை உணர்த்தி நிற்கிறது. அவர் இலத்தீன் அமெரிக்க வரலாற்றை படித்துவிட்டு அது ஈழத் தமிழர் வரலாற்றின் கொப்பி பேஸ்ட் (Copy-Paste) என்று விபரித்தார். எமக்கு நடந்தது ஏறக்குறைய அதே போல பல மக்களுக்கும் நடந்திருக்கிறது என்ற உண்மையை நாம் உள்வாங்க வேண்டும்.

இன்னுமொரு உதாரணம். சமாதான ஒப் பந்த காலத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக எத்தனை செய்திகளும் அறிக்கைகளும் ஐ.நாவில் இருந்து வந்தன என்று சிந்தித்து அத்தனை அறிக்கை கள் ஐ.நாவில் இருந்து வல்லரசுகளின் கொடுமை கள் பற்றி வந்தனவா என்று ஒப்பிட்டால் ஐ.நா என்பது எது என்று புரியும். மேற்குலக நிதியுடன் இயங்கும் அரச சார்பற்ற அமைப்புக்களும் இதற்கு விதிவிலக்கல்ல. அவை சிறீலங்கா அரசை கடுமையாக சாடினால் நாம் மகிழ்கிறோம். அவை வல்லரசுகளை சாடினால் அவர்களுக்கு நிதி கிடை க்காது என்பதுதான் உண்மை. இம்மாதிரி அகப் பட்டு கிடக்கும் அமைப்புகளின் பின்னணியையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவர்க ளை எமது தேவைக்கு நாம் கையாளலாம். ஆனால் அவை நமது போராட்ட தோழமை சக்திகள் அல்ல என்ற உண்மையை புரிந்து கொள்ள வேண்டும்.

இணையாத சந்ததிகள்

இவையெல்லாவற்றிற்கும் மேலாக, வரலா றும் அரசியல் தெளிவும் அடுத்தடுத்த தலைமுறை களை அடைவதற்காக, ஈழத்தமிழர் சந்ததிகள் இடையே தொடர் உரையாடல்கள் அதிகமாக தேவை. முக்கியமாக முள்ளிவாய்கால் கண்ட ஈழத் தமிழர் சந்ததிக்கு ஒரு அபூர்வமான அனுபவம் இருக்கிறது. வளரும் சந்ததிக்கு முக்கியமாக வெளிநாடுகளில் வளரும் சந்ததிக்கு அபாரமான கல்வி வசதிகளும் தேடலுக்கான திறமைகளும் இருக்கிறது. இன்று இவையிரண்டும் இணைய வில்லை. பெற்றோர் பிள்ளைகள் மட்டத்தில் கூட இணையவில்லை. இரண்டும் இணைந்து தேடி னால் வரலாற்று அறிவும் பூகோள அரசியல் அறி வும் சமூகத்தில் வளரும். அதுவே விடுதலைக்கு முதல்படி.

மக்கள் சக்தி

இன்று உலகத்துக்கு பூகோள அரசியலை கற்பிப்பவர்களில் அதிகம் அறியப்பட்டவர் நோம் சொம்ஸ்கி. அவருடைய எழுத்துக்களும், பேச்சுக் களும் நூல்களும் பிரமிப்பை தருபவை. அது மட்டு மல்ல அவரைப் பற்றிய எழுத்துக்களும் நூல்களும் கூட ஏராளம். "மக்கள் சக்தியே உலகின் இரண் டாவது வல்லரசு" என்ற அவர் விபரித்திருக்கிறார்.

மக்கள் சக்தியின் மேலும் மக்கள் தமக்கு எது நன்மையானது என்ற சிந்தித்து தெளியும் மக்களின் வல்லமை மேலும் அவர் அபார நம்பிக்கை வைத்தி ருக்கிறார். மாறாக எமது கலாச்சாரங்களிலும் சினி மாக்களிலும் தலைவர்களுக்கு அபரித மதிப்பு கொடுத்து மக்களை மாந்தைகளாக சித்தரித்து மக்க ளின் சிந்தித்து செயற்படும் திறனை இவை பெரிது படுத்துவதே இல்லை. மக்களை வழிநடத்துவ தற்கும் அவர்களுக்கு உதவி செய்வதற்கு மட் டுமே தலைவர்கள் உருவாவதில்லை.

மக்களின் கருத்துக்களை மதித்து அவர்களை ஊக்குவித்து செயற்பட வைப்பவர்களே தலைவ ர்கள். இம்மாதிரியான தலைவர்கள் இன்று எம்மத்தியில் தேவை. விடுதலைப்பு லிகளின் தலைவர் அவ்வாறு தம்மை செயற்பட வைத்தார் என்று பல பெண் போராளிகள் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்.

போராட்ட நோக்கம்

உலகில் இயங்கும் அரசுகளின் தன்மையை நோக்கும் போது தமிழீழ அரசு மட்டுமே எழுச்சி தரும் நோக்கமாக இருக்க முடியாது. நீண்ட கால நோக்கில் நாம் எதை நோக்கி போராடுகிறோம் என்ற தெளிவும் எமக்கு தேவை. நோம் சொம்ஸ்கி "வருங்கால அரசு" என்ற ஒரு நீளமான ஆக்கத்தில் மூன்று விதமான அரசுகளை பற்றி விபரிக்கிறார். 1930களில் பேசப்பட்ட "தாராளவாத அரசு", இர ண்டாம் உலக போருக்கு பின்னர் பிரபல மடைந்த "அரச சோசலிசம் மற்றும் அரச முதலாளித்துவம்", மற்றும் அவர் முன்வைக்கும் "தாராளவாத சோசலிசம் அல்லது பலமான மத்திய அரசற்ற மக்கள் ஆட்சி".

தொடர்ச்சி 17ம் பக்கம்

ஆறாத வலிகள்: ... தொடர்ச்சி...

களை ஏவிக்கொண்டிருந்தார்கள். வைத்தியசாலை யைச் சுற்றிலும் தொலைவில் பரவலாக குண்டுகள் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன. எறிகணை ஒன்று வைத்தியசாலைக்கு அருகில் வீழ்ந்து வெடி த்ததையடுத்து நானும் வேறு சிலரும் அங்கு ஓடிச் சென்று பார்த்தோம். எறிகணை வீழ்ந்து வெடித்த இடங்கள் எப்படி இருக்குமோ அதே போன்று தான் அந்த இடமும் சின்னாபின்னமாகிக் கிடந்தது. அலங்கோலமான அந்த இடத்தில் அந்தத் தந்தையும் தாயும் பலத்த காயங்களுடன் இறந்து கிடந்தார்கள். அதைவிட உடல் ஒன்று சிதறியதற்கு அடையாளமாக அவயவங்கள் வீசி எறியப்பட்டுக் கிடந்தன. தலைமுடியுடன் காணப்பட்ட ஒரு தலைப் பாகத்தை வைத்துத்தான் அந்தத் தாய் தந்தையருடன் இருந்த மகளே உடல் சிதறிப் பலி யாகினார் என்பதைக் கண்டறிந்தோம். அந்தக் கொட்டிலுக்கு அருகில் இருந்த பனை மரங்களும் குண்டுச் சிதறல்களின் சீற்றத்திற்கு ஆளாகியிரு ந்தன. எறிகணை தாக்கிய அந்த கொட்டில் வீட்டின் தரப்பாள் துண்டுகளும் ஏனைய பொருட்களின் சிதறல்களும் அந்த மரங்களில் தொங்கிக் கொண் டி ருந்தன. அவற்றுக்கிடையில் ஒரு மனிதக் கையும் காணப்பட்டது.

அதில் கட்டப்பட்டிருந்த நூல்தான் அந்தச் சம்பவத்தில் உடல் சிதறிப் போன பெண்ணின் கை என்று அடையாளம் காட்டியது. தாய் தந்தையர் இறந்து விட்டார்கள். உடல் சிதறியதனால் சகோதரி யைக்காணவில்லை. வீட்டை நெருங்கி வந்த போது மகன் கைகள் கால்களில் படுகாயமடைந்தார். வெளியில் வீழ்ந்து கிடந்த அவரைத் தூக்கி எடுத் தவுடன் அவர் மயங்கிப் போனார். அவசர அவசர மாக அருகில் இருந்து வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றோம். ஆனால் அங்கு மருந்து வசதிகள் இருக்கவில்லை. முதலுதவியாக கையில் அகப்பட்ட சீலைத் துண்டுகளினால் கட்டு போட ப்பட்டது. அதனால் இரத்தப் பெருக்கைத் தடுக்க முடிந்திருந்தது. அந்த நேரம் சர்வதேச செஞ்சிலு வைக் கப்பல் படுகாயமடைந்தவர்களை ஏற்றிச் செல்வதற்காக வந்து அந்தப் பகுதி கடற் பரப்பில் நங்கூரம் பாய்ச்சி இருந்தது. ஏனைய காயக் காரர்க ளுடன் அந்த இளைஞனையும் நினைவிழந்த நிலை யில் அந்தக் கப்பலில் ஏற்றி திரு கோணமலைக்கு அனுப்பி வைத்தோம். இந்தச் சம்பவம் 2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தின் முற்பகுதியில் இடம் பெற்றது.

மல்லாவி வைத்தியசாலை உடையார்கட் டில் இடம்பெயர்ந்த நிலையில் இயங்கிக் கொண்டி ருந்தது. புதுக்குடியிருப்பு வைத்தியசாலையும் புதுக்குடியிருப்பில் செயற்பட்டுக் கொண்டிருந்தது. இந்தப் பகுதிகள் எல்லாமே அரசாங்கத்தினால் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனம் செய்யப் பட்டிருந்தன. அந்தத் தற்காலிக வைத்தியசாலை களை வானில் சுற்றிப் பறந்த வான் படையினரு டைய உலங்கு வானூர்திகள் மற்றும் தாக்குதல் விமானங்களில் இருந்தவர்கள் வைத்திய நிலை ய ங்கள் என அடையாளம் காண்பதற்கு வசதியாக கூரைப் பகுதியில் செஞ்சிலுவை அடையாளத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் பொறித்திரு ந்தனர். ஆயினும் அந்த அடையாளத்தையும் மீறி உடை யார்கட்டு வைத்தி யசாலையும், புதுக்குடி யிருப்பு வைத்தியசாலையும் குண்டுத் தாக்குதல் களுக்கும் எறிகணைதாக்குதல்களுக்கும் இலக்காகி இருந்தன. அந்தப் பகுதிகளில் இருப்பது ஆபத்தா னது என்ற நிலைமை உருவாகியிருந்தது. அந்தப் பகுதிகளில் வந்து தஞ்சமடைந்திருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடி இடம்பெயர்ந்தார் கள். வைத்தியசாலைகளும் இடம்பெயர வேண்டிய தா யிற்று. இதனையடுத்தே புதுமாத்தளன் பாடசா லைக்கு 2009 பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி வைத்தி யசாலை நகர்த்தப்பட்டிருந்தது.

அன்றிலிருந்து ஏப்ரல் மாதம் 20 ஆம்திகதி வரை மழையாகப் பொழிந்த எறிகணை தாக்குதல் களுக்கு மத்தியில் பதட்டமான ஒரு சூழலில் அந்தப் பாடசாலை வைத்தியசாலையாகச் செயற் பட்டிருந்தது. முதலில் அந்தப் பாடசாலையில் இடம் பெயர்ந்த மக்கள் நிறைந்திருந்தார்கள். பாடசாலை கட்டிடங்களில் வைத்தியசாலைக்கு இடமளிப்பதற்காக அந்த மக்களுக்கு வேறிடத்தில் தங்குவதற்கான கூடார வசதிகளை அப்போதைய முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதி பராகப் பணியாற்றிய பார்த்திபன் அவர்கள் செய்தி ருந்தார். இதற்காக அவர் புதுக்குடியிருப்பில் இரு ந்து நேரடியாக அங்கு வருகை தந்திருந்தார். வன் னிக் களமுனைகளில் இயங்கிய வைத்தியசாலை களில் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வெளி நாடுகளைச் சேர்ந்த வைத்தியர்கள் சிலரும் பணியாற்றினர். இரா ணுவம் விடுதலைப்புலிகளுடைய பிரதேசங்களுக் குள் முன்னேறிக் கொண்டிருந்ததனால் வைத்திய சாலைகளும் பொது மக்களோடு அடிக்கடி இடம் பெயர நேர்ந்திருந்தது. இந்தச் சூழலில் கடும் மோத ல்கள் இடம்பெறுகின்றன. ஆகவே வெளி நாட்ட வர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாது. ஆகவே அவர்கள் அனைவரும் வன்னிப்பிரதேசத் தில் இருந்து வெளியேறிவிட வேண்டும் என அரசா ங்கம் அறிவித்திருந்தது. இதனையடுத்து சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள், ஐ.நா பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் அப்போது வெளி யேறி இருந்தார்கள்.

ஆனாலும் வன்னியில் நிலைமைகள் அகோ ரமாக இருந்ததனால் வைத்திய சேவை மிகவும் அவசியமாக இருந்தது. இதனால் சில வெளிநாட்டு வைத்தியர்கள் அப்போது புதுக்குடியிருப்பு வைத்தி யசாலையில் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அந்த வைத்தியசாலையும் தாக்குதல்களுக்கு இல க்காகியதையடுத்து புதுமாத்தளன் பகுதிக்கு வைத் தியசாலை மாற்றப்பட்ட சந்தர்ப்பத்தில் அந்த இறுதித் தொகுதியான வெளிநாட்டு வைத்தியர்கள் சிலரும் சர்வதேச செஞ்சிலுவைக் கப்பலில் வன்னி யை விட்டு வெளியேறிச் சென்றார்கள் என்று அந்த முன்னாள் மருத்துவப் போராளி விபரித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைக் கப்பலில் ஏற்றி அனுப்பி வைக்கப்பட்ட அந்த இளைஞனை எங்கே கொண்டு சென்றார்கள், அவருக்கு எங்கு சிகிச்சையளிக்கப்பட்டது, அவர் சுகமாகினாரா, என்ன நடந்தது என்ற விபரங்கள் எதுவும் வெளிவர வில்லை. விடுதலைப்புலிகள் அமைப்பில் இணை ந்திருந்த அவருடைய சகோதரன் எறிகணை தாக்கு தலில் உயிரிழந்த தாய்தந்தையரையும் சகோதரி யையும் உடனடியாக வந்து பார்க்க முடிய வில்லை. உயிராபத்து மிக்க அந்தச் சூழலில் அவருக்கு இந்த அனர்த்தம் பற்றிய தகவல்கள் சென்றடைய வில்லை. இறந்த உடல்களை புது மாத்தளன் பகுதி யில் அப்போதிருந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தினர் எடுத்து அடக்கம் செய்திருந்தனர். நாள் கட ந்த நிலையில் தனது குடும்பத்தினருக்கு நேர்ந்த அவலம் குறித்து அறிந்த அந்த சகோதரனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

யுத்தம் முடிவுக்கு வந்தது. வன்னியில் யுத்தமுனைகளில் சிக்கியிருந்த பொது மக்களும் போராளிகளும் வட்டுவாகல் வழியாக இராணுவ த்தினரிடம் சென்றடைந்தார்கள். இடம் பெயர்ந்த மக்களை அரசாங்கம் வவுனியா செட்டிகுளம் அகதிகள் முகாமில் அபயமளித்துத் தங்க வைத்தது. பெற்றோரையும் சகோதரர்களையும் இழந்த துயரம் மேலிட்டதனால் உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட அந்த இளைஞன் நரம்பியல் நோய்க்கு ஆளாகிய நிலையில் செட்டிகுளம் அகதி முகாமில் தனிமை ப்பட்டிருந்ததைப் பலர் கண்டிருந்தனர். ஆனால் அதற்குப் பின்னர் அவருக்கு என்ன நடந்தது, அவர் எங்கு சென்றார், இப்போது அவர் எங்கு இருக்கி ன்றார் என்ற விபரங்கள் எதுவும் எவருக்கும் தெரி யாது.

முள்ளிவாய்க்காலின் ஊழிக்கால நிலைமை கள் இவ்வாறு பல குடும்பங்களைச் சிதைத்து சின்னாபின்னமாக்கி உள்ளது. காயமடைந்தவர்கள் இல்லாத குடும்பமே இல்லையென்று கூறு மள விற்கு முள்ளிவாய்க்காலில் மக்கள் பாதிக்கப்பட்டி ருந்தார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் அவயவங் களை இழந்துள்ளார்கள். பலகுடும்பங்கள் தமது உற்றவர்களை இழந்துள்ளன. இதனால் பெற் றோரை இழந்த பிள்ளைகளும், பிள்ளைகளை இழந்த பெற்றோரும் என பலவாறு பாதிக்கப்பட்ட வர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அந்த முள்ளி வாய்க்கால் துயரத்தில் இருந்து இன்னுமே மீள முடியாவர்களாகவும், தங்களுக்கு நேர்ந்த இழப்பு களை சீரணித்துக் கொள்ள முடியாதவர்களா கவும் இருக்கின்றார்கள். உளவியல் ஆற்றுப்படுத்தலுக்கு வழியின்றி, திரள் நிலையில் துயரங்களுக் கும் துன்பங்களுக்கும் ஆளாகிய பின்னர் அதேபோன்ற திரள் நிலையில் தங்களுக்கு நேர்ந்த இழப்புகளுக் காக ஒன்றுகூடி வாய்விட்டு வருந்தி அழுது ஆற் றிக்கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றார்கள். அவர்களில் பலரும் உண்மையில் நடைப் பிணங் களாகவே நடமாடுகின்றார்கள். முள்ளிவாய்க் காலில் யுத்தம் முடிவடைந்து பதினொரு ஆண்டு கள் கழிந்து விட்டன. ஆனால் அங்கு பாதிக்கப் பட்டவர்களுக்கு ஆறுதலளிப்பதற்கு உரிய செயற் பாடுகள் இதுவ ரையிலும் உரிய முறையில் முன் னெடுக்கப்படவில்லை. அவர்களுக்கு நேர்ந்த உறவு நிலை இழப்புகளுக்கும், அவர்கள் அகதிகளாக அனுபவித்த அவமானங்களுக்கும் எந்தவகையி லும் உரிய இழப்பீட்டு நடவடிக்கைகள் முன்னெடு க்கப்பட வில்லை. அநீதிக்கு உள்ளாக்கப்பட்ட அந்த மக்களுக்கு நீதி வழங்கப்படவுமில்லை. பதினனொரு ஆண்டுகளின் பின்னரும் அவர்க ளுக்கு நீதி கிடைக்குமா என்பதற்கான அறிகுறி களையும் கா ண முடியவில்லை.

• • •

சிறகுகள் ஒடிந்தாலும் ... தொடர்ச்சி...

மாணவர்களும் பயணித்தால் நிச்சயம் மாற்றம் ஏற்படும். இயலாது என்று ஒன்றுமில்லை என் பதை இன்று இப்படியான மாற்றுத்திறனாளி மாணவர்கள் சாதித்துக் காட்டியிருக்கிறார்கள்.

சிறகுகள் ஒடிக்கப்பட்டவுடன் சிதைந்து போகாமல் தன் ஒற்றை இலக்கு மட்டுமே கண் ணில் தெரிய சக்கர நாற்காலியில் இருந்தவாறே சாதித்திருக்கின்றாள்.!"நான் ஒரு வைத்தியராக வந்து என்னைப் போன்று பாதிக்கப்பட்டவர்க ளிற்கு சேவை செய்வதே என் இலட்சியம்" என்கி ன்றாள் செல்வி மதியழகன் விதுர்சிகா..!

முள்ளிவாய்க்கால் தந்த வலிகளில் வாடிப் போகாமல் மீண்டும் உயிர்த்தெழுந்து வந்திரு க்கும் இந்த சாதனையாளர்களை நாம் வாழ்த் தாமல் இருக்க முடியாது.

சாதிக்க நினைப்பவர்களின் முதற்படி தன்னை முழுமையாக நம்புவது தான்..! இவளும் அப்படித்தான். அனைத்து நாட்களையும் புதுப் புது நாட்களாகவே கடக்க முயற்சித்துக் கொண் டிக்கிறாள்.

கால்கள் நடக்க மறுத்தாலும், உடல் நரம்பு கள் சுள்ளென வலித்தாலும்... ஒவ்வொரு நாளி லும் ஏதோவொன்றை சந்தோசமாக நினைத்து கொள்கின்றாள்.

ஈழம் என்ற ... தொடர்ச்சி...

கடந்த வெள்ளிக்கிழமை (15) வெளியாகிய த கார்டியன் நாளேடு ஈழம் என்பது எந்த சுற்று லாத் தீவின் பூர்வீகப் பெயர் என்ற வினாவை எழுப்பியிருந்தது. விடையில் சிறீலங்கா என்ற பெ யரும் வழங்கப்பட்டிருந்தது.

மேலும் குறிப்பிட்ட தீவின் அண்மைய கிளர்ச்சி அமைப்பின் பெயர் தமிழீழ விடுதலை ப்புலிகள் எனவும் குறிப்பிடப்பட்டிரு ந்தது.

தமிழ் இனம் தொடர்பில் வெளிவரும் எந்த அடையாளத்தையும் ஆரம்பத்திலேயே அழிப்பதில் சிறீலங்கா அரசு தீவிரமாக இருந்து வருகின்றது.

தொடரப்படக் கூடிய ... தொடர்ச்சி...

ஜேர்மனின் பேர்மன் பகுதியில் 2013ஆம் ஆண்டு இடம்பெற்ற நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் இர ண்டாவது அமர்வில் சிறீலங்கா அரசு தமிழ் மக்க ளுக்கு எதிராக இனஅழிப்பில் ஈடுபட்டது என் பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதன் முதலாவது அமர்வு அயர்லாந்தின் டப்பிளின் பகுதியில் 2010ஆம் ஆண்டு இடம்பெற்றிருந்தது.

இனப்படுகொலை மற்றும் போர்க் குற்ற ங்கள் தொடர்பில் அதிக அனுபவம் வாய்ந்த அனைத்துலக நாடுகளின் முன்னனி பல்கலை க்கழகங்களின் போராசிரியர்கள் உட்பட 11 நீதி யாளர்கள் இந்த அமர்வில் பங்கு பற்றியிருந்தனர்.

எனவே எமது விடுதலைப் போரானது புதிய பாதை ஊடாக விரைவாக நகர்வதற்குரிய இடத்தில் தான் கையளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதனை நாம் இன்று தவற விட்டுள்ளோம். இது தொடர்பில் நான் ஓவியர் புகழேந்தியுடன் பேசும் போது அவர் கூறினார் "எந்த இனத்திற் கும் கிடைக்காத ஒரு அரிய சந்தர்ப்பம் எமக்கு கிடைத்தது. ஆனால் நாம் அதனை தவற விட்டு ள்ளோம்" என்று. உண் மைதான். அதற்கு காரணம் யார்?

பேரழிவைச் சந்திக்கும் இனம் ஓரணியில் இணைந்து மேலும் வலுப்பெறும் என்பதே வர லாறு. யூதர்களின் ஒருங்கிணைவும், பல வருட ங்களின் பின்னர் மீண்டும் இணைந்த கிழக்கு, மேற்கு ஜேர்மன் மக்களும் அதனை தான் கூறுகின் றனர்.

ஆனால் இங்கு எமது எதிர்பார்ப்பைவிட எதிரியின் எதிர்பார்ப்பே நிகழ்ந்தது. தாயகத்திலும், புலத்திலும் தமிழினம் சிதறிப் போயுள்ளது. புலம் பெயர் தேசங்களில் மேற்கொள்ளப்பட்ட கலந்து ரையாடல்களின் முடிவு இது.

எனவே தான் கடந்த 11 வருடங்களாக எமது போராட்டம் தேங்கிப் போயுள்ளது, அனைத் துலக சமூகமும் குறிப்பாக மேற்குலகமும் எம்மை க் கைவிட்டு சிறீலங்கா பக்கம் செல்ல முனைந்து நிற்கின்றது. அதாவது 2009 இற்கு முன்னர் அனை த்துலக மட்டத்தில் இருந்த அடையாளத்தை தமிழ் இனம் தொலைத்து நிற்கின்றது.

தாயக அரசியல் பதவி மோகம், விலை போதல், ஊழல் என இலக்கை தூர எறிந்துவிட்டு துண்டு துண்டாக கிடக்கின்றது தமிழ் கட்சிகள். புலம்பெயர் தேசங்களிலும் சந்திக்கு சந்தி சங்கம் வைத்து சண்டை பிடிப்பதிலேயே காலத்தை கடத் துகிறோம்.

"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிதென்று வாழுங்கள். நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்குச் சிறியவர் களே." என்ற பொருந்தலைவனின் வழி வந்தவர் கள் கூட தங்களிடையே ஒரு பொதுவான ஒருமை ப்பாட்டுக்கு வரமுடியாமல் சிதறிக்கிடந்து ஒருவர் மேல் ஒருவர் சேற்றை வாரியடிப்பது இனத்திற்கே தலைகுனிவு, மிக வேதனையான விடயமும் கூட.

இவற்றால்தான் தொடரப்படக் கூடிய இடத்தில் வலுவான ஆதாரங்களுடன் விடப்பட்ட போராட்டத்தையும் நாம் தொடர முடியாத நிலை யில் நிற்கின்றோம். இதற்கு காரணமாக அமைப் புக்களையும், நபர்களையும் எமது போராட்டத்தை சிதைத்தவர்களாகவே தமிழ் இனம் தனது வரலா ற்றில் பதிவு செய்து கொள்ளும்.

எனவே எமது விடுதலைக்காக நாம் மிக விரைவாக ஒருங்கிணைவதுடன், விடுதலை ஒன்றே எமது இலக்கு என்ற சிந்தனையுடன் எல் லோரும் ஒரு அணியில் பயணிக்க வேண்டும். அது வே சிறீலங்கா அரசின் இனப்படுகொலையில் அழிவைச் சந்தித்த எமது மக்களுக்கும், போராளி களுக்கும் நாம் செய்யும் தூய்மையான அஞ்சலி யாகும்.

• • •

முள்ளிவாய்க்கால் ... தொடர்ச்சி...

போவார்கள் என்பதை உணர்ந்து கொஞ்சம் மக்களோடு மக்களாக மறைந்து தான் இருந்தேன்.

கேள்வி:

முள்ளிவாய்க்கால் அவலம் நடந்தேறி 11 வருடங்கள் ஆகிய நிலையில் தாங்கள் ஓர் தமிழர் எனும் வகையில் தங்கள் எண்ணம் அல்லது ஏக்கம் என்ன?

பதில்:

தமிழ் மக்களின் நீண்ட கால கதவு தலைவர் பிரபாகரன் அவர்களோடு முடிந்து விட்டது. தமிழ் மக்களை கடவுளாலும் இனிமேல் காப்பாற்ற முடியாது. பல்லாயிரம் மாவீரர் மற்றும் பொது மக் களை இழந்த பூர்வீக மூத்த தமிழ் குடிமக்கள் மற்ற வர்களிடம் கையேந்தி வாழும் நிலைக்கு வந்து இருக்கின்றோம். யாராக இருந்தாலும் எதையும் தமிழ் மக்கள் மீது செய்து விட்டு போகலாம். கேட்க, பார்க்க யாரும் இல்லை என்ற நிலையில் இப்போது வாழ்கின்றோம்.

தமிழ் மக்கள் இவர்களுடைய மண்ணில் மற்றவர் ஆதிக்கம் இன்றி கௌரவமாக சகல அரசியல் உரிமைகளோடும் வாழ வேண்டும். பெரும்பான்மை மக்களுக்கு இருக்கும் அனைத்து அதிகாரங்களும் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டும்.

எதிர் காலத்தில் எமது இளைய தலை முறையினர் தமிழ் மக்களின் அரசியல் பொருளா தாரத்தோடு எமது சொந்த மண்ணில் வாழ்வதற் கான அனைத்து வழிவகைகளையும் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் நாங்கள் அமைத்து கொடுக்க வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்களின் பாதுகா ப்பையும்அவர்களின்இருப்பையும்உறுதிப்படுத்த உலக நாடுகள் முன் வந்து தமிழ் மக்களின் அரசி யல் பிரச்சனைக்கு அதிகார பகிர்வு அல்லது வாக் கெடுப்பு ஒன்றை நடத்தி உரிமையோடு வாழ வழி வகை செய்ய உலகத் தமிழ் அமைப்புகள் அனை த்தும் ஒன்றுபட்டு ஒரு அணியில் திரண்டு குரல் கொடுக்க வேண்டும்.. இழக்கப்பட்ட அரசியல் உரிமையை வென்றெடுக்க வேண்டும்.

அப்போது மாவீரர்களின் கனவில் உதய மாகிய எமது தாயகம் செழித்து நிம்மதி பெரு மூச்சோடு எதிர்கால சந்ததியினர் வாழ முடியும் என்பதே எமது நீண்ட கால எதிர்பார்ப்பும் கூட...

• • •

மீளெழுச்சிக்கு ... தொடர்ச்சி...

இதுவே அவரது கனவாகவும் உள்ளது.

அதே ஆக்கத்தில் அவர், "இனி வரும் காலங்களில் தாராளவாத சோசலிசம் வளர்ச்சி அடையலாம். ஆனால் இன்று அது போன்ற எதையும் நாம் காண முடியாது. இருந்தும் அதன் சில அம்சங்களை சில இடங்களில் காணலாம். தனிமனித உரிமையின் முழுவடிவத்தை சில மேற்குலக சனநாயத்தில் பார்க் கிறோம். ஆனால் இவற்றில் துயரமான குறைபாடுகள் பல உண்டு. மக்கள் விழிப்புணர்வை தட்டி எழுப்பி அவர்க ளை சமூகத்தில் ஈடுபடுத்தும் பல மூன்றாம் உலக நாடுகளின் புரட்சிகர இயக்கங்களிலும் இதன் சில அம்சங்களை பார்க்கிறோம். ஆனால் இவ்வியக் கங்களில் ஏற்றுக்கொள்ள முடியாத சர்வாதிகார போக்கும் சேர்ந்தே தோன்றுகிறது. ...."

இன்று நிலவும் கோணங்கி சனநாயக அரசு களிலிருந்து வேறுபட்ட மக்களாட்சியையே மேலே குறிப்பிட்ட ஆக்கத்தில் நோம் சொம்ஸகி பேசுகிறார். இவ்வாக்கத்தின் மொழியாக்கத்தை இப் பத்தியில் விரைவில் எதிர்பாருங்கள்.

அரசியல் கைதிகள் ... தொடர்ச்சி...

றப்போவதில்லை என மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரனுக்கும் மகிந்த ராஜபக்சவிற்கும் இடையில் கடந்த வாரம் இடம்பெற்ற அரசியல் கைதிகள் தொடர்பான பேச்சுக்களைத் தொடர் ந்தே சிறீலங்கா அரசின் கருத்தாக ரம்புக்வெல வின் கருத்து அமைந்துள்ளது இங்கு குறிப்பிடத் தக்கது.

சிறீலங்காவை ... தொடர்ச்சி...

காணொளி கலந்துரையாடலில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

முதலில் இரு நாடுகளும் இணைந்து தமது தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கொரோ னா வைரசினை ஒழிப்பது, பின்னர் இரு நாடு களும் இணைந்து பொருளாதாரத்தை கட்டியெழு ப்புவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த கலந்துரையாடலில் இந்திய மற்றும் சிறீலங்கா பொருளியல் வல்லுநர்கள் மற்றும் பேராசிரியர் கள் கலந்து கொண்டிருந்தனர்.

அச்சுறுத்தலையும் ... தொடர்ச்சி...

சிறீலங்காகாவல்துறையினர்புகைப்படம்எடுத்து அச்சுறுத்தியதுடன், ஊடகவியலாளர்களையும் படம்பிடித்து அச்சுறுத்தியிருந்தனர். யாழ். காவல் நிலைய பொறுப்பதிகாரியே இவ்வாறு மக்களை அச்சுறுதியுள்ளார்.

எனினும் இந்த சம்பவத்தை ஊடகவிய லார்கள் படம் பிடித்து அதனை வெளி உலகிற்கு தெரியப்படுத்தியுள்ளனர். முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தில் மண்டைதீவு, புனித ஜாகப்பர் தேவாலயம், தமிழாராட்சி மாநாட்டு படுகொலை களில் உயிரிழந்தவர்களுக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னனியினர் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

வீடுகளில் விளக்கேற்றி ... தொடர்ச்சி...

த்துள்ளார்.

இலங்கையில் முள்ளிவாய்க்காலில் சிங்கள இராணுவ வெறியர்களால் படுகொலை செய் யப்பட்ட மக்கள் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகி யோரின் பதினொராம் ஆண்டு நினைவு நிகழ்ச்சி மே 17-18 ஆகிய நாட்களில் நடைபெறவி ருக்கிறது.

கொரோனா தொற்று நோய் உலகமெல் லாம் பரவி யிருக்கிற வேளையில் வழக்கம் போல் இந்நிகழ்ச்சியை நடத்த இயலாத சூழ்நிலை உள் ளது. எனவே அவர வர்கள் வீடுகளில் இருந்தவாறே அந்த நாட்களில் மாலை 6 மணிக்கு விளக்கு ஏற்றி வீர வணக்கம் செலு த்தும்படி உலகத் தமிழர்களை வேண்டிக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

வடக்கில் அதிகரிக்கும் ... தொடர்ச்சி...

க்கும் நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தியுள் ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தமிழ் மக் களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

பரந்தன் முல்லைத்தீவு பிரதான வீதியில், முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கு செல்லும் வீதியின் ஆரம்பத்தில் சிறீலங்கா காவல்துறை சோதனை நிலையம் ஒன்றும், இரட்டை வாய்க் கால் பகுதியில் இராணுவ சோதனை நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளதுடன், சோதனை களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

வட்டுவாகல் பாலத்திற்கு முன்பாகவும் அதிகளவு சிறீலங்கா படையினர் நிறுத்தப்பட் டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெண் நோயியலில் இன்னமும் தடுமாறும் உலகம்

DR. மா. திருக்குமார் மகப்பேற்றியல்துறை சிரேஸ்ட விரிவுரையாளரும், நிபுணரும் தலைவர் – மருத்துவ சிகிச்சைத்துறை மருத்துவபீடம் கிழக்குப் பல்கலைக்கழகம்

பெண்களின் உரிமைகளிலும், பெண்களின் உடல் ஆரோக்கியத்திலும் இன்று வரை பல்வேறு முன்னேற்றங்கள், பாரிய வளர்ச்சிகள் ஏற்பட்ட போதிலும், பல்வேறு வகையான ஆரோக் கியம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு ஆண்களை விட பெண்கள் அதிகம் முகம் கொடுக்க நேரிடு கிறது.

உலகளாவிய நோய்களின் தாக்கத்தை கருத் தில் கொள்ளும் பொது மகப்பேறு தவிர்ந்த பெண் நோய்கள் 4.5% மான நோய்களுக்கு காரணமாக அமைவதாக கணக்கிடப்படுகிறது. இது மலேரியா (1.04%) காச நோய் (1.9%), இதய நோய்கள் (2.2%) மற்றும் மகப்பேறு சார்ந்த நோய்கள் (3.5%) என்ப வற்றை விட மிக அதிகமானது என்பது எமக்கு ஆச் சரியமான தகவலாக இருக்கலாம்.

பெண்களின் மார்பு, சூலகம், கருப்பை சம்பந்தமான நோய்கள், கர்ப்ப காலத்தில் ஏற்படும் பிரச்சினைகள், இவை தொட ர்பான புற்றுநோய்கள் போன் றவை, பாலியல் தொற்று நோய்கள், குடும்பத்திட்ட முறைகளை பெற்றுக் கொ ள்ள பாரிய தடை களை சந்தித்தல் இவற்றுள் அடங் கும். இதைவிட பெண்களு க்கு எதிரான வீட்டு வன் முறைகளும் அதிகரித்த வண் ணமே உள் ளது.

பெண்களில் ஏற்ப டும் கருப்பை சம்பந்தமான புற்று நோய்களில் கருப்பைக் கழுத்து புற்றுநோய்கள் மற் றும் கருப்பையின் அகவ ணியில் ஏற் படும் புற்று நோய்கள் பாரிய விளைவுக ளையும், மரணத்தையும் ஏற் படுத்துகின்றது.

கருப்பைக் கழுத்து புற்றுநோயை மிகமிக ஆரம்ப த்திலேயே கண்டுபிடித்து சிகிச்சை செய் வதன் ஊடாக, அதனைமுற்று முழு தாக குணப் படுத்த முடியும். அபிவிரு த்தி அடைந்த நாடுகளில் 30 – 35 வயதி ற்கு மேற்பட்ட பெண்களுக்கு கிரம மான கருப்பைக் கழுத்து பரிசோதனையை(Pap test) 3 – 5 வருட இடைவெளியில் எல்லா பெண் களுக்கும் மேற்கொள்ளப்படுகின்றது. இதன்மூலம் அவர்கள் இந்நோயின் தாக்கத்திலிருந்து பெரும் பாலும் விடுபட்டுக் கொள்கிறார்கள். ஆனால் வளர்முக நாடுகளில் இப்பரிசோதனை எல்லாப்

பெண்களுக்கும் இலகுவில் கிடைக்கப்பெறுவ தில்லை. இதனால் கருப்பைக் கழுத்து புற்றுநோய் கள் மிகவும் வலுப்பெற்ற நிலையிலேயே கண்டு பிடிக்கப்படுகிறது. இதனால் இந்நோயினால் மர ணம் நிகழ்வதை தடுக்க முடி வதில்லை. கருப்பைக் கழுத்து புற்று நோயானது இலங்கையில் பெண் களுக்கு ஏற்படும் புற்று நோயில் மூன்றாவது இடத் தைப் பெறுகிறது. (மார்பு புற்றுநோய் 1ஆவது இடம், தைரொயிட் புற்றுநோய் 2ஆவது இடம்)

அடுத்து கருப்பையின் அகவணியில் ஏற் படும் புற்றுநோயானது இலங்கையில் பெண்க ளுக்கு ஏற்படும் புற்றுநோயில் 7ஆவது இடத்தில் உள்ளது. இது பொதுவாக 45 வயதிற்கு மேற்பட்ட பெண்களில் ஏற்படும். மேலும் மாதவிலக்கு ஒழு ங்கீனம், அதீத குருதி வெளியேற்றம் என்பன இதன் அறிகுறிகள் ஆகும். பல பெண்கள் இதனை பெரிது படுத்துவதில்லை. அல்லது வைத்திய ஆலோ சனை பெறுவதில்லை. இதனால் இந்நோயினை மிக ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்க தவறுகிறார்கள்.

சூலகப் புற்றுநோயானது இலங்கையில் பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோயில் 4ஆவது இடத்தை பெறுகிறது. சூலகம் பெண்களின் இடுப்பின் அடிக்குழியுள் அமைந்துள்ளதாலும், சூலகக் கட்டிகள் அறிகுறிகளை வெளிப்படுத்தும் தன்மைகள் குறைவாக இருப்பதாலும் இவற்றை கிரமமான வைத்திய பரிசோதனை மூலமே கண் டறிய முடியும். சூலகப் புற்றுநோயை தமது குடும் பப் பின்னணியில் வைத்திருப்பவர்கள் 40 – 45 வயதிற்கு பின்பு கிரமமான வைத்திய பரிசோத னையை செய்வதன் மூலமாக இந்நோயை ஆரம்ப கட்டத்தில் கண்டு தீர்வு காணும் வாய்ப்பு உள்ளது. பாலியல் நோய்களை எடுத்துக் கொண்டால், சுகா தாரமற்ற மாதவிடாய் கால பராமரிப்பு, முறையற்ற அல்லது பாதுகாப்பற்ற பாலுறவு ஆகிய காரணி களால் ஏற்படுகிறது. பாலுறவினூடான தொற்று இருபாலரையும் பாதிக்க கூடியது எனினும் பெண் களுக்கு இந்நோய் ஏற்படும் விகிதமும், அந்நோய் ஏற்படுத்தும் விளைவுகளும் அதிகமாகும்.

கல்வியறிவு குறைந்த, வறிய பெண்கள் இந் நோய் சம்பந்தமான விழிப்புணர்வு குறைந்தவர் களாக இருப்பதால், இந்நோயின் தாக்கத்திற்கு கூடு தலாக முகம் கொடுக்க நேரிடுகிறது.

இலங்கையில் பெண்களின் சராசரி திருமண வயது 23.6 வருடங்கள் ஆகும். எனினும் பல பெண் கள் இளவயது திருமணங்கள், திருமணமாகாது முறையற்ற பாலுறவை வைத்திருத்தல் போன்ற காரணங்களால் கருத்தரிக்கின்றனர். இதனால் அவர் கள் கல்வியிலிருந்து இடைவிலக காரணமாகிறது.

இலங்கையில் 6.1%ஆன கர்ப்பம் இளவயது கர்ப்பமாகும். இது பெண்களில் பல்வேறு வகை யான ஆரோக்கிய, சமூக, உளவியல் பிரச்சினைக ளுக்கு வழிவகுக்கின்றது. இலங்கையில் இளவயது திருமணங்கள் மட்டக்களப்பில் மிகவும் கூடுதலாக உள்ளது. 21.4%வீதமான கர்ப்பம் தரித்த பெண்கள், இளவயதினர் ஆவர். இது இலங்கையின் அதிகூடிய விகிதமாகும். இது அவர்களின் குறைவான கல்வி மட்டம், பொருளாதார நிலைக்கு மிக முக்கிய காரணமாகும். இதில் 75.4%வீதமானோர் தமிழ்ப் பெண்கள் ஆவர். 24% முஸ் லிம்கள் ஆவர். இது தமிழ் மக்களின் பின்னடை வைக் காட்டும் மிக முக்கிய விடய மாகும்.

பெண்களின் கல்வி ஓர் சமூக வளர்ச்சியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த வல் லது. எனவே சமூக பொரு ளாதார அபிவிருத்தி மற் றும் கல்வியில் மேம்பாடு போன்ற விடயத்தினூடாக இளவயதுத் திருமணத்தை தடுக்க வேண்டும்.

இலங்கையில் சராசரி 68% வீதமான குடும்பப் பெண்கள் கருத்தடை முறையை பின் பற்று கின்றனர். ஆனால் இவ் வீதமானது மட்டக்க ளப்பில் 34% ஆகும். இத னால் தேவையற்ற கர்ப்பம் இரண்டு கர்ப்பத்திற்கு இடை வெளிகுறைவடைதல், தாய் மற்றும் சிசு மரணவீதம் அதி கரித்தல் போன்ற விளைவு கள் ஏற்படும்.

பெண்களுக்கு எதிரான வீட்டு வன் முறையானது, இலங்கையின்பல்வேறு மாவட்டங் களிலும் இடம்பெறுகின்றது. எனினும் மட்டக்கள ப்பின் செங்கலடிப் பிரதேசத்தில் 2019ஆம் ஆண்டு மேற்கொண்ட ஆய்வில் 90% வீத மான பெண்கள் வீட்டு வன்முறையில் பாதிக்கப் படுவதாக அறிய முடிகிறது. இது மிகவும் ஆபத் தான கட்டமாகும்.

நவீன மருத்துவ விஞ்ஞான வளர்ச்சியின் மத்தியிலும் பெண்கள் உலகளாவிய பாலியல் தொற்று முதல், மகப்பேறு சார்ந்த சிக்கல்கள் மற் றும் புற்றுநோய் வரையான நோய்களாலும், வன் முறைகளாலும் பாதிக்கப்படும் எண்ணிக்கை அதி கரித்து கொண்டே போவது மருத்துவ துறைக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது. இந்நிலையில் இருந்து விடுபட வேண்டுமாயின் பெண்களிடை யேயும், சமூக கலாச்சார தளங்களிலும் அதி கூடிய விழிப்புணர்வும் ஒத்துழைப்பும் அவசி யமாகிறது.

எனவே பெண்நோயியலில் இன்னமும் உலகம் தடுமாறிக் கொண்டிருக்கும் போது, இன, மத, சமூக வன்கொடுமைகளாலும், வறுமையினா லும் இன்னும் தடம் மாறியும், தடுமாறியும் சென்று கொண்டிருக்கும் எமது சமூக நிலையை சரிசெய்ய வேண்டும். சரியான திட்டமிடலின் கீழ் எமது மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தி, கல்வி மேம்பாடு, விழிப்புணர்வு, பெண்களின் வலுவூட் டல் என்பன சம காலத்தில் நடைமுறைப்படு த்தப்படும் போதே எமது சமுதாயத்தில் மறைமுக மானதாக்கத்தை ஏற்படுத்தி வரும் பெண் நோய்களி னின்றும் நாம் எம்மை தற்காத்து கொள்ள முடியும்.

• • •